தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2	சென்னை	30—7—55	சனிக்கிழமை	இதழ் 7

ஒரு கதை

இருபத்தைந்தாண்டு காலமாக அந்தக்கோயில் மூடிக்கிடக்கிறது. இருநூற்றைம்பது வீடுகள்கொண்ட அந்த சிங்காரத் தமிழூருக்கு வரதையான்தேவதை'யாக விளங்கிய கோயில்தான் அது; ஆனாலும் அந்தக் கோயில் இப்போது பூட்டிக்கிடக்கிறது. ராசகோபுரம் என்று அந்த ஊர் மக்களால் அழைக்கப்பட்ட அந்தக் கோயிலின்முன் கோபுரம், இன்று மணிப்புருக்களுக்கும், கனி தின்னும் வௌவால்களுக்கும் நிரந்தர வாசஸ்தலமாகிவிட்டது. சித்திரங்கள் அத்தனையும் உருக்குலைந்து காணப்பட்டன. ...ங்கள் இடிந்துபோய் வளைந்து ...த்துக்கொண்டிருந்தன. அந்தக் கோயிலின் சித்திரமண்டபங்களைப் பார்த்து-தென்றல் வரும் சாளரங்களில் நின்று அனுபவித்து-பளிங்கு அறைகளில் பக்தி உலாவி அந்த ஊர்மக்களுக்கு கால் நூற்றாண்டாகிவிட்டது. இத்தனைக்கும் அந்த ...லே சுயமரியாதைக் கட்சிப் பிரச்சாரம் கிடையாது; ஆனாலும் அந்தக் கோயிலை யாரும் திறப்பதில்லை. வெண்கலமணிக்கதவு, வெளியே பெரிய இரும்புப்பூட்டுப் போட்டுப் பூட்டப்பட்டப்பட்டிருக்கிறது. மதிலிலே வெள்ளாடு ஓடி விளையாடுகிறது; கோயிலுக்குள் ...ி வளர்ந்திருக்கும் இலவமரத்தில் உட்கார்ந்துகொண்டு கிளிக்கூட்டம் பெருங்கூச்சல் போடுகிறது; ஆனால், அந்தக் கோயிலையே கட்டிய அந்த ஊர் மனிதர்கள் கோயிலின் ஓரோரம் போகவே அஞ்சுகிறார்கள்; அவர்களையறியாமலே அவர்களுக்கு ஒருவித நடுக்கம் பிறந்துவிடுகிறது. அந்த ஊருக்கு வந்து போகும், சர்க்கார் அதிகாரிகள்கூட ...ய கோயிலின் கதையைக் கேட்டு மூக்கிலே விரல் வைத்துத்தான் போயிருக்கிறார்கள். "பூ! இவ்வளவுதானா, இதற்கா கோயிலை பூட்டினீர்கள்" என்று அதட்டிப்பேச இதுவரை யாருக்கும் துணிவு வரவில்லை.

"கிராமத்தைத்தான் கெடுத்தான் என்றால், கோயிலையும் குட்டிச் சுவராக்கிவிட்டானே! ஏ, தர்ம தேவதையே, உன் வீட்டை ...த்து மூடவைத்த, அவன் வீட்டில் இன்னுமா விளக்கெரிவது! கூடாது காசியாத்தா, கூடவே, கூடாது! அவன் வீட்டில் இருள் சூழவேண்டும்" இப்படிப்பட்ட இதய ஒலியின் பேரலைகள் செல்லப்பரின் சுற்றுக் கல்சுவற்றில் மோதிடத்தான் செய்தன. பாவம்! செல்லப்பரா கோயிலை மூடினர்! அவர் தானே அந்தக் கோயிலின் தர்மகர்த்தா! வருமானத்தைத் துறந்து அவர் ஏன் மூடவேண்டும்! கோயிலைத் திறந்துவிட்டாலும், அதன் வாயிலுக்கருகில்கூட போக நெஞ்சுரமில்லாதபோது கோயிலை யார் மூடினால் என்ன? யாருடைய இடையில் அந்தச் சாவி தொங்கினாலென்ன? மொத்தத்தில் அந்த ஊரில் இப்போது கோயிலில்லை. கோயிலிருந்தும் கோயில்லாத ஊராகிவிட்டது. ஏன்; இன்றும் அந்தக் கோயில் பூட்டை உடைக்க முடியாதா? முடியும்; ஆனால் அந்தப் பூட்டுக்கும் சாவிக்கும் இடையில் அடங்கியிருக்கும் பயங்கரக் கதையை உடைத்து நொறுக்க யாரால் முடியும்! உண்மைதெரிந்தவர்கள்கூட உறக்கம் நீங்கி எழவில்லையே!

கேள்விப்பட்ட கதையைச் சொல்கிறேன்; நீங்களாவது ஆவனசெய்ய முயலுவீர்களா? அவரவர் வாக்குமூலங்களல்ல இவை; கேள்விப்பட்ட கதை.

☆

லண்டனிலே வாழ எவ்வளவோ ஆசைப்பட்டான்; உலக நாடுகளைச் சுற்றிப்பார்க்க அவன் உள்ளம் துடித்துக்கொண்டே இருந்தது. முடிந்ததா? 'நாமொன்று நினைக்க, தெய்வமொன்று நினைத்தது' என்ற அசட்டு முதுமொழி அவனைவெற்றிகொண்டுவிட்டதாகச் சொல்லமாட்டேன்; அவன் தகுதிக்கு ஏற்ற ஆசைக்குத் தானே அவன் இதயத்தில் இடமளித்தான். ஆண்டியாக இருந்துகொண்டு அரசகுமாரியை மணக்க வேண்டுமென்றோ, ஆந்தைப் பறவை, அரசவம சத்து செல்லப் பறவையாக ஆசைப்படுவதுபோலவோ அவன் ஆசைப்படவில்லை. எஞ்சினியரிங் படித்து பட்டம்பெற்ற அவன் வெளிநாடு செல்ல ஆசைப்படுவது தவருகுமா? கல்வி வாசனையறியாதவர்களே, கலைநுணுக்கம் அறியப் போவதாக விளம்பரப்படுத்திவிட்டுப் போகும் இந்நாளில், அந்தக் காசிநாதன் பி. இ. ஏன் வெளிநாடு செல்லக்கூடாது.

தேர்வு முடிந்த மறுநாள் கிராமத்திற்கு வருவதாக அவன் தந்தைக்குத் தந்தி கொடுத்திருந்தான. ஊரிலே அவனுக்கு அவ்வளவு பெரிய வரவேற்பு இருக்குமென்று அவன் நினைக்கவே இல்லை. ஊர முக்கியஸ்தர்கள், அத்தனைபேரும் அவனைப் பாராட்டிப்போனுர்கள். அவன் முகத்தைப் பார்த்தாலே பாவம் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த செல்வந்தர் செல்லப்பர்கூட அவன் வீடேறி வந்திருந்தார் அவனைக்காண. செல்லப்பர் வந்ததின் மர்மம் பிறகுதானே அவனுக்குத் தெரியவந்தது.

வந்தவர்களெல்லாம் வீடு திரும்பினார்கள். வீடு, உடைத்தூற்றப் பட்டுவிட்ட முட்டைக்கூடாகக் கிடந்தது. துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு பக்கம் வந்தார் அவன் தந்தை.

"காசிநாதா!"

"அப்பா!"

"செல்லப்பர் வந்தாரே பார்த்தாயா?"

"பார்த்தேன், பார்த்தேன்! படிப்பு என்பது சாமான்யமாப்பா! படியாதவர்களையும் படியவைக்கும் 'மாயசக்தி' கல்வியிடம்உண்டப்பா!"

"அட பைத்தியக்காரா, அவர் உன் படிப்புக்காக மட்டும்வரவில்லையாடா, பணம் கொடுத்து வாங்கிய மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டுப் போக வந்தார்."

"யார் மாப்பிள்ளை, யாருக்குப் பணங்கொடுத்தார்; விளங்கும்படி சொல்லுங்களப்பா!"

"நீனும், நானும் தானே உட்கார்ந்திருக்கோம்; நான் உன் அப்பன்! வேறு யாரு மாப்பிள்ளை!" மகிழ்ச்சிப் பெருக்கால் மகனிடம்கூட கேலியாகப் பேசத் தொடங்கிவிட்டார் அந்த வயோதிகர்.

"என்ன, செல்லப்பருக்கு நான் மாப்பிள்ளையா?"

"ஆமா, உன் படிப்புக்காக அவரிடம் வாங்கிய ரூபாய் ஐயாயிரத்திற்காக, அவர் மகளை உனக்கு எடுத்துக்கொள்வதாக உறுதிகூறிவிட்டேன் காசிநாதா, அவர் இல்லாவிட்டால் நீ படித்திருக்கமுடியுமா?"

"அதற்காக வேண்டாததையெல்லாம் தலையிலேயா கட்டிக்கொள்கிறது! எப்பா, ஊரிலே கடன் வாங்கிறவர்களெல்லாம், 'உன் மகளை என் மகனுக்கு முடித்து வைக்கிறேன்' என்று சொல்லியா கடன் வாங்குகிறார்கள்! மன்னித்துவிடுங்கள்! என்னால்முடியாது; ஒரு மனிதன் எத்தனை திருமணங்களைத் தான செய்துகொள்வது?"

"என்ன, என்ன? ஒரு மனிதன் எத்தனை திருமணங்களைச் செய்து கொள்வதா? காசிநாதா, விளையாடவா செய்யிறே?"

"இது விளையாட்டுக் காரியமல்ல என்று எனக்குத் தெரியும்;வினயத்தோடுதான் சொல்லுகிறேன் எனக்குத் திருமணமாகிவிட்டது" என்று சொல்லி அவன் துணைவி ஜெகதாவும் அவனுமாக இருந்து எடுத்த புகைப்படத்தை அவன் தந்தைமுன் வீசினன். அவரது கண்கள் அகலவிரிந்தன.

"ஐயாயிர ரூபாய்! இனி நான் என்ன செய்யப்போகிறேன்" என்று ஏக்கமும் துக்கமும் அவரது நெற்றிச் சுழிப்பிலே ஒளிந்துகிடந்தன.

நாழிகை கடந்து, நாள் கடந்து, வாரமும் கடந்தது. செல்லப்பருக்குச் செய்தியெட்டி வழக்கம்போல சுடுமூஞ்சியாகிவிட்டார். இன்னும் பத்துநாட்களில் ரூபாய் ஐயாயிரம்

(8ம் பக்கம் பார்க்க)

இராவணன் திராவிடனு, ஆரியனு? (உட் பக்கம்)

இராவணன் திராவிடனா, ஆரியனா?

பன்மொழிப்புலவர்,
கா. அப்பாதுரையார்,
எம்.ஏ., எல்.டி.

இராவணன் இராமன் எதிரி மட்டுமல்ல. ஆரிய முனிவர்களின் எதிரி, அவர்கள் வேள்விக்கு எதிரி! தென்னாடு முழுவதும், தண்டகாரணியம் உட்பட அவன் ஆட்சியிலிருந்தது. அவன் மண்டலாதிபதிகள் ஆரியநாட்டின் எல்லைவரை இருந்து, அவர்களை எதிர்த்து, கொலை வேள்வியைத் தடுத்தனர். பின்னாட்களில் இதே செயல் செய்த காரணத்தினால் தான் அசோகனும் அவன் மரபினரான மௌரியரும் ஆரியர் கோபத்திற்கும், புராணங்களின் வசைமொழிகளுக்கும் பழிமொழிகளுக்கும் ஆளாயினர். ஆரியர் அவன் மரபினரை வீழ்த்தி புஷ்யமித்திரசுங்கன் என்ற புதிய ஆரிய ஆதரவாளனான அரசனை முடிசூட்டி, அவன் மூலமாக மீண்டும் வேத வேள்விகளைப் பரப்பினர். அசோகன் ஆரியத்தை எதிர்த்ததற்கு அவன் புத்தமதமே காரணம். ஆனால், இராவணன் எதிர்த்ததற்குக் காரணம் அவன் ஆரிய வேள்வி முறையை ஏற்காத திராவிட அரசன் என்பதேயாகும். இன்றும் திராவிடர் வேள்வி செய்வதில்லை; போற்றுவதுமில்லை. சைவ நாயன்மாரிலே ஆரியச் சம்பந்தரின் தேவாரம்தான அதைப் போற்றுகிறது. ஆரியரான மாணிக்கவாசகரோ, சுந்தரரோகூட அதை வலியுறுத்த தயங்கி விட்டுவிட்டனர். திராவிட அப்பரோ அதை எங்கும் பாராட்டாதுவிட்டதுடன், புத்தசமணர்களை வேள்வியை எதிர்த்ததற்காகக் கண்டிக்கவுமில்லை.

இராவணன் அசோகனுக்குமுன் அவனைப்போலச் சக்கரவர்த்தியாகத் தென்னாடு முழுவதையும் இலங்கையையும் ஆண்டு ஆரிய வேள்விகளுக்குத் தடையுத்தரவு பிறப்பித்ததனாலேயே, ஆரிய இராமனை ஆரிய முனிவர்கள் இராவணன்மீது ஏவினர். அதற்காகவே விசுவாமித்திரர் அவனுக்குத் தனிப் படைக்கலங்களும் மந்திர தந்திரங்களும் உபதேசம் செய்து, அவனுக்கு வலுத்தேடினார். தண்டகாரணியத்திலுள்ள முனிவர்கள் அதுவகையில் அவனை ஊக்குவதற்காகவே அவனுக்கு இனிய மதுவும், மாமிசமும்; கலந்த விருந்துகள், மாதர் சுகபோக வசதிகள் செய்து அவன் ஆதரவை நாடினர்.

கரடியினத்தவனான சாம்புவான், குரங்கினத்தவனான அனுமான் ஆகியவர்கள் உதவியைப் பெறும்படியும் தூண்டியவர்கள் ஆரிய முனிவரே.

வால்மீகி இராமாயணம் இராவணனைப் பற்றித் தரும் தகவல்கள் இவை. கம்பர் தரும் தகவல்களும் இவற்றிற்கு மாறுபட்டவையல்ல.

இராவணன் திராவிடனே என்பதைத் திராவிடநாட்டு மரபுகளும் தெள்ளத் தெளியக் கூறுகின்றன.

சேர சோழ பாண்டியர் வேறு மரபாகப் பிரியுமுன் இருந்த பெரும் பாண்டிய மரபினரே இராவணனும் மாவலியும் என்று மலையாள நாட்டு மரபு கூறுகிறது. தொல்காப்பியர் காலத்தில் கவாடபுரத்திலிருந்து ஆண்ட சயமா கீர்த்தி அல்லது நிலந்தரு திருவிற் பாண்டியனே இராவணன் என்று பல புலவர்கள் கருதுகின்றனர். இவனே வடநாட்டில் மக்களைக் குடியேற்றி நாகரிகப்படுத்தியவன். மலாயா, சாவா, சுமத்திரா தீவுகளை அடக்கி, அங்கே கடல்நீர் தன் அடிகளை அலம்பும்படி முந்நீர் விழா ஆற்றி வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற பெயரால் அந்நாளைய கடலுலக முழுவதும் ஆண்டவன். அவன் புகழைக் குறைப்பதற்காகவே அவன் வாழ்நாளுக்குப் பின், இராமன் அவனை வென்றதாக ஆரியர் கதை கட்டினர் என்று பல அறிஞர் கருதுகின்றனர். இதற்கேற்ப, சாவா, சுமத்திராவில் இன்றுவரை நடைபெறும் இராமாயண நாடகத்தில் இராவணனே கிடையாது. இராமாயணக் கதை திருமணம் பட்டாபிஷேகத்துடன் முடிவடைகிறது.

இது எப்படியானாலும் தமிழர் உள்ளத்தில் ஏழாம் நூற்றுண்டு வரையிலும், கம்பர் காலம் வரையிலும், இராவணன் வாலி ஆகிய திராவிட வீரர்களை மக்கள் மதிப்புடனும் அன்புடனும் போற்றியிருந்தனர் என்பதைத் தேவார திருவாசகங்களும் கம்பராமாயணமும் காட்டுகின்றன. வாலியின் மனைவி தாரையும், இராவணன் மனைவி வண்டார் குழலி என்கிற மண்டோதரியும் தமிழர்களால் கற்புக்கரசியர் வரிசையில் முன்னணியில் வைத்துப் பாராட்டப்பட்டனர். இவர்கள் புகழிடங்களையும் அவ்வையார், கண்ணகியார் இடத்தையும்தான் ஆரியர் திரௌபதிகளாலும் நளாயினிகளாலும் நிரப்ப இன்றளவும் பாடுபட்டு வருகின்றனர்.

இராவணனுடைய இசைக்கலைத் திறமையைத் தமிழ் நூல்கள் மட்டுமன்றி ஆரிய மரபுகளும் வானளாவப் புகழ்கின்றன. அதைத்தம் புகழாக்கி அவன் பாடிய தமிழிசையைச் சாமகானமாக்க ஆரியம் முயன்றுள்ளது. சைவர் ஆரியர் வழியடைந்த பின் அவனைப் பழிக்க முற்பட்டாலும், அவன் சிவபக்தியை வானளாவப் புகழத் தயங்கவில்லை. கயிலை தூக்க முயன்ற அவன் பக்திச் செயலைப் பின்னால் அவன் பகைமைச் செயலாகத் திரித்துக்கூற முயன்றாலும் பக்தியின் பீடும் வீரத் துணிவும் சிறிதும் மங்கிவிடவில்லை.

அகத்தியர் கதையில் அகத்தியர் இராவணனைச் சூழ்ச்சியாலேயே வசப்படுத்தியதாக அறிகிறோம்.

இராவணன் மனைவி கற்பரசி மட்டுமல்ல. அவர் பாண்டியநாட்டிலுள்ள திருப்பெருந் துறையில் நோன்புத் தவமியற்றி அவ்விடத்துக்கே உயர்வளித்தவர் என்று மாணிக்கவாசகர் திருவாசகம் கூறுகிறது.

**‘ஆர்கலிசூழ் தென் இலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மெயபிரானை’**

என்ற அடிகள் காண்க.

இராவணன் பெருமையைக் குறைக்க முயன்று பாடிய தமிழ் அடியார் ஒருவரே-அவர் ஆரியச் சம்பந்தர்தான் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது.

ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒருமுகமாக இராம-இராவணப் போர் பற்றிய இராமாயணக் கதை ஆரிய திராவிடப் போராட்டத்தைக் குறிக்கும் ஆரிய இதிகாசம் என்றே கூறியுள்ளனர். எந்தத் திராவிட அறிஞரோ, ஆரிய அறிஞரோகூட இராமன் திராவிடன் என்றோ இராவணன் ஆரியன் என்றோ கூறவில்லை. இராமன், இராவணன் ஆகிய இருவரையுமே பாராட்டியவர் சமணர்களே. அவர்கள் இராவணனை வித்தியாதரர் இனம் அதாவது வேள்வியையும் வைதிக மண முறைகளையும் எதிர்த்த திராவிட இனம் என்றே கூறுகின்றனர். இராமனை அவர்கள் ஆரியன் என்று கூற விரும்பவில்லை. ஆரியக் கொலை வேள்விக்கு ஆதரவளிப்பதற்காக ஆரியரால் ஐந்தாம் படைத்தலைவனாக்கப்பட்டவன் என்றே அவர்கள் கொள்கின்றனர். இராமன் ஆரியர் பக்கம் நின்றாலும், அவன் ஒரு திராவிட விபீஷணனே என்பது அவர்கள் கருத்துப் போலும்!

இராவணன் ஆரியன் என்று ஆரியரிடையே பிரசாரம் செய்பவர் யாரையும் நாம் கண்டதில்லை, கேட்டதில்லை. அவனை ஆரியன் என்பது திராவிடர் இயக்கத்தின் அனுதாபிகளிடம் குழப்பம் உண்டாக்கும் நயவஞ்சகச் சூழ்ச்சி எண்ணம் கொண்டல்லாது வேறில்லை என்பதற்கு இதுவே சான்று தரப்போதியது. ஆயினும் வாத முறையில் எடுத்துக்கொண்டு அதற்கு என்ன ஆதாரம் என்று பார்ப்போம்.

இராவணன் காசிபர் கோத்திரத்தில் பிறந்தவன், ஆகவே பிராமணன், ஆகவே ஆரியன் என்பது தான் இந்தப் பிரசார வாதம்.

இது உண்மையென்றே வைத்துக் கொள்வோம். காசிபகோத்திரப் பிராமணர் இன்றும் உண்டு. இராவண கோத்திரப் பிராமணர் யாரும் இல்லையே! இராவணனுடன் அவன் மரபு இறந்துபட்டது என்றால், அல்லது அவன் ஆரியர் எதிரியானதால் கோத்திர முதல்வனாக வில்லை என்றால், விபீஷண கோத்திரமாவது இருக்கலாமே. சிறந்த ஆழ்வாரான விபீஷணனை முன்னோனாகக் கொள்ளப் பிராமணர் தயங்கியது ஏனோ?

விபீஷணகோத்திரம் இல்லாவிட்டாலும் இராட்சசகோத்திரம் இலங்கைக்கோத்திரம் என்றாவது கோத்திரம் இருந்திருக்கலாமே!

இலங்கையில் தமிழர் அல்லாமல் சிங்களவரும் உள்ளனர். சிங்களவரும் அவர்கள் மொழியும் ஆரிய மொழி என்று ஆரிய அறிஞர் கூறுகின்றனரே! சிங்களவரிலாவது இப்படி ஒரு கோத்திரம் இருக்கலாம். அல்லது அவர்களாலாவது இராவணன் விபீஷணன் பெயர் பாராட்டப்பட்டிருக்கலாமே! இன்றளவும் இராவணன், இராக்கதர் ஆகிய பெயர்களைப் புத்தமத ஆரியராகக் கொள்ளப்படும் சிங்களவர் கூடப் போற்றாததேன்?

உண்மையில் இராவணன் காசிப கோத்திரத்தான் என்ற கருத்து இராமாயணஇதிகாசக்கருத்தன்று, புராணக் கருத்து. வால்மீகி இராமாயணத்தில் உத்தரகாண்டம் வால்மீகி எழுதியதல்ல, பிற்காலத்தில், அனேகமாகக் கம்பர் காலத்திலோ அதை அடுத்தோ எழுதிச் சேர்க்கப்பட்டதேயாகும். ஏனெனில் கம்பராமாயணத்தில்கூடக் கம்பர் பாடியது மற்ற ஆறு காண்டம் மட்டுமதான். உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தரோ, வேறு யாரோ இயற்றி அதனுடன் சேர்க்கப்பட்ட பகுதியேயாகும். ஒருவேளை வால்மீகி இராமாயணத்தில் உத்தரகாண்டத்தை எழுதி சேர்த்தவர்களே, கம்பராமாயணத்திலும் அக்காண்டத்தை எழுதி ஒட்டக்கூத்தர் பெயராலோ, கம்பர் பெயராலோ அதை உலவவிட முயன்றிருக்கக்கூடும்!

திருவள்ளுவரை ஆரியர் என்று எந்த ஆரியரும் கூறிப் போற்றக் காணோம். ஆனால் திருவள்ளுவர் புகழை ஆரியத்துக்கு உரியதாக்க ஆதிபகவன் கதை கட்டியதுண்டு. அதுபோலவே இராவணனுக்குத் தமிழ்நாட்டில் புகழ் கெடாதிருந்த காலத்தில் ஆரிய புராணங்கள் இராவணனையும் பிராமண மரபினராக்கி, வால்மீகி வேண்டா வெறுப்பாலும் தமிழர் மனம் திறந்தும் இராவணனுக்குக் கொடுத்த புகழைத் தமதாக்க முயன்றிருக்க வேண்டும். ஆனால் பொய்மலிந்த இப்போலி முயற்சி இன்றளவும் வெற்றி பெறவில்லை. தன்னறிவின்றி ஆரியர் கூறியதற்கு ஒத்தூதும் விபீஷணர்களுக்காகவே இக்கதையும் இதுபோன்ற கதைகளும் அவ்வப்போது பகுத்தறிவுக் கொள்கையாளர்களைக் கலக்கப் பயன்படுத்தப்படுகிறது.

கடைசியாக இராவணனையும் இராக்கதர், அசுரர்களையும் கருடபுராணம் போன்ற புராணங்கள் தேவர்களுடன் தாயாதித் தொடர்புடையவர்களாகக் கூறுகின்றன. அசுரர் இராக்கதர் எல்லோருமே ஆரியர் என்னும் இந்தக் கூற்று ஆரிய புராணக் கூற்றுக்களின் பொருந்தா முரண்பாட்டையே எடுத்துக் காட்டுகிறது. இப்பொருந்தாப் புளுகுகளையும் யாராவது ஒத்துக் கொள்ள முன்வந்தால், அவர்கள் கழுகு முதலிய பறவைகளையும், விலங்குகளையும்கூட ஆரிய மரபில் பிறந்தவை என்று கூறவேண்டும். ஏனென்றால் அவையும் தேவர்களுடன் உறவுடையவையே.

இராவணன் திராவிடன் என்பதே ஆரியர் ஆராய்ச்சியும் திராவிடர் தமிழராய்ச்சியும் கண்ட ஒன்றுபட்ட முடிவு. இராவணன் ஆரியன் என்ற கூற்று ஆராய்ச்சி அல்ல, பொருந்தக்கூறும் நல்ல புராணப் புளுகுகூட அல்ல. அது ஆரியரிடம் இடம்பெற விரும்பினும் அவர்களால் ஏற்கப்படாமல், திராவிடரைப் பழிப்பதனால் ஆரியருக்கு நல்ல தாசர்களாக உயர்வுபெற விரும்பும் கங்காணிக் கூட்டத்தார் சார்பாகப் பரப்பப்பட்ட ஒரு பிரசாரப் புளுகு மட்டுமே.

குழந்தைக் குரல்,
(அழ. வள்ளியப்பாவின் கவிதைத் தொகுதி. ஆரம்பப் பள்ளியாசிரியருக்கும் பெற்றோருக்கும் பயன்படும் புத்தகம்,)
தனிப்பிரதி விலை ரூ. 1
ஏஜண்டுகளுக்கு 20 பெர்சண்ட் கழிவு உண்டு.
மாணவர் இல்லம்
ரங்கநாதம் செட்டி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை-6.

எண்ணம்

கண்ணதாசன்

தலைமை நிலையத்திலிருந்து அறிக்கை பிறந்துவிட்டது, நமக்கெல்லாம் குழப்பம் தீரும் வகையில். சென்ற இதழ் 'எண்ணம்' பிறக்கின்ற வேளையில்; உண்மையில் நமக்கு ஒன்று புரியாமலிருந்தது. "இந்தியை எதிர்த்துப் போராட வேண்டியது அவசியத்திலும் அவசியம் - ஆனால், பெரியாரின் கொடி எதிர்ப்புப் போராட்டம், இந்திப் பிரச்சினையில் எல்லாக் கட்சிக்காரர்களின் ஆதரவும் கிடைப்பதைக் கெடுத்துவிடாதா?" என்பதுதான் அது. அதுபற்றிய முடிவொன்றை நாமே செய்துகொள்ளக்கூடாது--முடியாது-ஆகையால், சென்ற இதழில், 'இந்தி எதிர்ப்பு' அவசியத்தைக் குறிப்பிட்டு, பெரியாரின் போராட்டத்தில் தி. மு. க. கலக்கலாமா என்பது பற்றி ஒன்றும் கூறாமல் விட்டுவிட்டோம். இப்போது எந்த முடிவை நாம் எதிர்பார்த்தோமோ, அதே, தலைமை நிலையத்திலிருந்து பிறந்துள்ளது. அரசியல் தந்திரம், கொள்கையைச் செயல்படுத்தும் நளினமான போக்கு, காலமறிந்து இடத்தால் செய்தல் என்னும் முறைகளை நன்குணர்ந்த அரசியல் வாதிகள் யாரும், தலைமை நிலையம் அறிவித்ததும், அண்ணா விளக்கிச் சொன்னதுமான முடிவுக்குத்தான் வரமுடியும்.

பிரச்சினைகளைப் பொதுவில் இரண்டு கூறுகளாக வகுக்கலாம்.ஒன்று; ஒரு கட்சி, சகல கட்சிகளும் எதிர்க்குமென்று கருதினாலும் தான் சரி என்று கண்டு போராடும் பிரச்சினை. இதில், இந்தக் கட்சி, தனக்கு இஷ்டமான வழியில் போராடுவதில் தவறில்லை. மற்றொன்று, சகல கட்சிகளுக்கும் பொதுவான பிரச்சினை. இதிலே, அந்தக் கட்சி, மற்றக் கட்சிகளின், கட்சி பூர்வமான ஒத்துழைப்பு இல்லையெனினும், அவற்றிலுள்ள ஆட்களைக் கவரும் வகையில்தான் போராடவேண்டும். அப்போதுதான் எந்தக் கொள்கைக்காகப் போராடுகிறோமோ அது வெற்றி பெற வழி பிறக்கும்.

இந்தி எதிர்ப்பு விவகாரத்தில், காங்கிரஸ் கட்சிக்கும் ஆட்சிக்கும்உடன்பாடுண்டு. ஆனால், அது அறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ளதுபோல, "எத்தனை ஆண்டுகளில் கொண்டுவந்து திணிப்பது?" என்பதில் தோன்றும் எதிர்ப்பே தவிர, "வேண்டுமா வேண்டாமா?" என்று கேட்டு இரண்டாவது முடிவில் எதிர்க்கும் எதிர்ப்பல்ல, ஆனாலும், இந்த இரண்டாவது முடிவான; "வேண்டவே வேண்டாம்!" என்பதனை, காங்கிரஸில் உள்ள தனி நபர்கள் பலர் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். "பொது மொழியே தேவைதானா?" என்கிற நமது கேள்வி, பல காங்கிரஸ்காரர்களுடைய மனதில் எழ ஆரம்பித்திருக்கிறது. இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்வதுதான், இந்திக்கு வெகு நாட்களாக எதிர்ப்புக் காட்டிவரும் நாம் செய்யக்கூடியதாகும். ஒரு கட்சி தனதென்று கருதும், ஒரு ஆட்சியின் கொடியை, இந்த நேரத்தில் எரிக்க விரும்புவதை தி. மு. கழகம் ஆதரிக்கவில்லை-காரணம் அது, நமது கொள்கைக் கிருக்கும் நிகரில்லாத பலத்தைக் கணிசமான அளவில் குறைத்துவிடக்கூடும்.

சமீப காலத்தில், "இந்தி வேண்டாம்!" எனக் கூறிய காங்கிரஸ்காரர்கள்கூட, இந்தப் போராட்டத்தின் விளைவாக வாய்திறக்க விரும்பாமல் போய்விடக்கூடும். அதனால்தான், தி. மு. கழகத்தலைமை நிலையம் தீவிரமாகச் சிந்தித்து, "கலந்துகொள்வதில்லை" என்று முடிவுகட்டியிருக்கிறது.

அந்த முடிவுதான், தி. மு. கழகத்தின் ஒன்றரை லட்சம் மெம்பர்களுக்கும் உடன்பாடான முடிவு என்பதில் ஐயமில்லை. இந்த நேரத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ளதுபோல,நம்மைக் "கோழைகள்" என்றோ "துரோகிகள்" என்றோ அவர்கள் தூற்றுவார்கள் என்பதும் உண்மைதான். ஆனாலும் அது அவர்களுக்கு வழக்கமான பாடம் என்பதைத் தவிர, புதிதில்லை!

சென்ற, ஜூலை மும்முனைப்போரின் எதிரொலியாக வழக்குகள் நடந்துகொண்டிருந்த சமயம் பெரியார் அவர்களின் சில பேச்சுகளும் தலையங்கங்களும், 'குத்தூசி'யும் அந்த வழக்குகளின் தன்மையையே மாற்றி, நம்மைக் காட்டிக்கொடுப்பனவாகவே இருந்தன. ஆனாலும் துரோகப்பட்டம் சாட்ட நம்மில் யாரும் முன்வரவில்லை.

"இது என்ன போராட்டம்!" என்று, எதிரிகளைக் காட்டிலும் மோசமாகக் கேலி செய்தார்கள். ஆனாலும் துரோகப் பட்டம் சாட்டவில்லை நாம். இப்படி, நமது போராட்டங்களில் அவர்கள் ஒத்துழைக்கவில்லை என்பதோடன்றி, எதிர்ப்பிரச்சாரம் வேறு செய்தார்கள், இத்தனைக்கும் அது அவர்களுக்கும் உடன்பாடான கொள்கைக்காக நடந்த போராட்டந்தான்!

ஆகவே, இந்தி எதிர்ப்பில் முழுமூச்சாக நிற்கும் முன்னேற்றக் கழகம், பெரியாரின் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வதில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. அறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ளதுபோல, "போராட்டம் என்பது, ஒரு கட்டத்தோடு முடிந்துவிடுவதா, என்ன! எத்தனையோ போராட்டங்கள்!" அதிலும் நமக்கு எவ்வளவோ நல்ல வழிகள்-வசதிகள்; வரட்டும்; பார்ப்போம்!

'புளுகுமணி'யின் பித்தலாட்டம்!

இயக்கத் தோழர்கள் கவனிக்க...

ஜூலை 23ம் தேதி, சென்னை 40வது வட்ட தி. மு. கழகக் கூட்டத்தில் கலந்துகொண்ட நான், கொடி கொளுத்தும் போராட்டத்திற்கு ஆதரவளிக்க எங்களில் பலர் தயாராக இருக்கிறார்கள் என்று பேசியதாக 24---7---55 காலை தினமணி இதழில் பிரசுரமாகியிருக்கிறது. இது முற்றிலும் தவறான செய்தியாகும். நான் இந்திமொழித் திணிப்பைக் கண்டித்துவிட்டு, பெரியாரின் போராட்டம் குறித்துப் பேசுகையில், தி. மு. கழகத் தலைமை நிலையம் இன்னும் முடிவுசெய்யவில்லை என்று சொன்னேனேயன்றி, 'புளுகுமணி'யில் பிரசுரமாகியிருக்கபடி பேசினேனில்லை. இதனை அங்குகூடிய பத்தாயிரம் மக்களும், அறிவர். இத்தகைய கண்ணியமற்ற போக்கைத் 'தினமணி'யார் திருத்திக்கொள்வது உத்தமம்.

கண்ணதாசன்.

புதுவைத் தேர்தல்— 'வாத்தியார்' வெற்றி!

புதுவையில் நடைபெற்ற தேர்தலில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் வெற்றிபெற்றார்கள். 1944ல் புதுவையில் நடைபெற்ற திராவிடகழக மாநாட்டில் பெரும் குழப்பம் விளைவித்தவரும், கவிஞரையும், மற்றவர்களையும் கல்லால் அடித்தவருமான அன்சாரி துரைசாமி என்ற காங்கிரஸ்காரரை எதிர்த்து நின்று புரட்சிக்கவிஞர் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. அந்தக் காங்கிரஸ்காரர், தனது தேர்தல் பிரச்சாரத்தில், 'பாரதிதாசன் கோயிலை இடிக்கும் கட்சியைச் சேர்ந்தவர், என அவதூறாகப் பிரச்சாரம் செய்தும் வைதீகர்கள் நிறைந்த அந்த தொகுதியில் காங்கிரஸ் மண் கவ்வியிருப்பது கவிஞருக்குப் பெருமையும், பூரிப்பும் தரக்கூடிய பெருவெற்றியாகும்.

"உலகியற்றியான்" யார்? ஆண்டவனா, அரசனா?

முதலில் இந்த இரு சொற்றொடரின் முதற் சொல்லான 'உலகு' யாது என்று பார்ப்போம். உலகு என்பது பரந்த நிலப் பரப்பின் பகுதியாக சிற்றெல்லை வகுக்கப்பட்ட நாட்டைக் குறிக்குமா? அந்தச் சொல்லுக்குள்ள நேர் பொருளின் படி, குறிக்காது-ஒன்று.

'உலகு', நாடு என்கிற பொருளில் தனிப்பட-அடைமொழியில்லாமல் வழங்கப்பட்ட இடங்கள், இலக்கியங்களில் குறைவு. அப்படி வழங்கப் பட்ட இடங்களிலும் 'உயர்வுணர்வு' கொண்ட கவி மிகைப்பாடாகத்தான் காணப்படுகின்றன. அதாவது தனது கிராமம், கரும்புக்குடி எனிருந்தால், அந்த ஊர்க்காரன், கரும்புமாநகர் என்று அழைப்ப தில்லையா, அதுபோல!-இரண்டு.

இவற்றைத் தவிர நாடு, நேரடியாக உலகு என்று அழைப்பட வில்லை-முடியாத காரணத்தால்!

"திருக்குறள் இயற்றப்பட்ட காலத்தில், 'உலகு' என்ற சொல், ஒரு அரசுக்குரிய நிலத்திற்கு மட்டுமே பயன்பட்டதுமுண்டு. 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகு' என்பது தொல்காப்பியப்பாயிரம். இதில் உலகு என்ற சொல் தமிழ்நாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்!"

இவ்வாறு, தோழர் சிவஞானம், தனது 'அறிவுத்திறன்மிக்க' ஆராய்ச்சியில் அலசுகிறார். மேற்காணும் வரிகளை நண்பர்கள் கூர்ந்துபடிக்க வேண்டும். சாதாரண புத்தி இருந்தாலும் போதும், அவர் கூற்றிலுள்ள அறியாமையைக் கண்டு பிடிக்க! மேலே காணும் தொல்காப்பிய வரிகளில், 'உலகு' என்னும் சொல் மட்டுமே தமிழ் நாட்டைக் குறிக்கிறதாம்! ஆகா! ஈதன்றோ ஆராய்ச்சி! முன்னால் இருக்கிற "தமிழ் கூறுநல்" என்பது என்னவாம்! வெறும் 'உலகு' தமிழ்நாட்டைக் குறித்துவிடுகிறதா! தமிழ்நாடு என்று கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காக அது "தமிழ் கூறுநல் உலகு" ஆகவே நிற்கிறதே!

ஆம்; 'தமிழ் கூறுநல் உலகு' என்பதால்தான் அது தமிழ்நாடாகிறது! அதிலும் 'உலகு', நாட்டை பெருமைப்படுத்துவான் வேண்டிப் போடப்பட்டது என்பது வெள்ளிடைமலை!

அதுபோல், சிலம்பில், நடுகற் காதையில் சேரமன்னன் செங்குட்டுவன் 'உலக மன்னவன்' என்று அழைக்கப்படுவதும், பெருமை அணியாகத்தான்! புலவர்கள் அனைவரது கருத்தும் இதுதான். நிற்க.

'இயற்றியான்' என்றால் யார்? இயற்றுதல் - ஆக்கல், நடாத்தல் எனப் பொருள் தரும். முதலில இயற்றுதல், நடத்துதல் என்ற பொருளில் எந்த இலக்கியத்தில் எத்தனை இடங்களில் வந்துள்ளது? எனக்குத் தெரிந்தவரை இல்லை! எல்லாமும், "ஆக்கல் - செய்தல்" என்ற பொருளிலேயே வந்துள்ளன. இலக்கிய வழக்கில் அச்சொல்லுக்கு 'நடத்துதல்' பாருள்ாக இயங்கவில்லை. அதோடு, அப்பொருளை இந்தக் குறட்பாவுக்கு வைத்துப் பார்ப்பதாயினும்கூட உலகை நடத்துபவன், அரசனல்ல. நடக்கும் உலகைக் கண்காணிப்பவனே அரசன்! நிற்க, அதோடு, உலகை ஆக்கியவன் அரசனல்ல என்பதும் தெளிவு உலகை இயற்றியவன் கடவுள் என்கிற ஆரியக் கூற்றையோ, அல்லது, "அது கடவுளோ என்னவோ, அனைத்தையும் கடந்த சக்தி" என்கிற கூற்றையோ பொதுவாகக் கொண்டே வள்ளுவன் அந்த வார்த்தையைப்போட்டு அக்குறளைஅமைத்திருக்கவேண்டும். அது கடவுளல்ல-அரசனாக இருக்க முடியும் என்று யாராவது ஒரு உரையாசிரியனுக்குச் சந்தேகம் வந்து, அதனை முழுக்கச் சொல்லாமல் மூடிச்சொல்ல விரும்பியிருந்தால்கூட, தமது உரையில், அரசனுக்கும் ஆண்டவனுக்கும் பொதுவான. 'இறைவன்' என்ற சொல்லைப் போட்டிருக்கமுடியும். ஆனால், ஒவ்வொரு உரையாசிரியரும் கடவுள்-படைத்தவன்-ஆக்கியவன்-கர்த்தா - என்றே கூறுகிறார்கள்

காரணம், அவ்வார்த்தை, வழக்கிலோ, இலக்கியத்திலோ அரசனென்று இயங்கியதே இல்லை.

சிவஞானம், 'கால்கழுவும்' கம்பன்கூட, இராமகாதைஆரம்பத்தில்,

"உலகம் யாவையும்
தாமுள ஆக்கலும்"
....

என, 'கடவுள் வணக்கம்' தொடருகிறான். இது குருடனுக்கும் தெரிகிற கதிரோவியமாக-இந்த நேரத்தில் பயன்படுகிறது! உலகம் - ஆக்கல்-இது கடவுள் வணக்கத்தில்! உரை - உலகை உண்டாக்கியதும், எனத் தொடருகிறது. உலகியற்றியானுக்கும் இதற்கும் சம்பந்தமிருக்கிறதா இல்லையா? எண்ணிப் பாருங்கள். வள்ளுவன் காலத்துக்குப் பிந்தியதே கம்பன் காலம். ஆகவே குறட்பா வினடியாக மேற்கோள் முறையியில்லாமல் இந்தக் கம்பனாரின் கடவுள் வணக்கம் தொடங்கியிருக்கிறது எனத் துணிவதில் தவறில்லை.

ஆகவே, 'சொல்பகுத்து' ஆராயும் முறைப்படி, உலகியற்றியான் அரசனல்ல-அல்லவே அல்ல! நிற்க.

வள்ளுவன், எத்தனை இடங்களில் 'உலகு' என்ற சொல்லை உபயோகித்திருக்கிறான்?

அறத்துப்பால்

(1) அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.
—1—

(2) வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற்பாற்று.
—11—

(3) விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும்பசி.
—13—

(4) தானம் தவமிரண்டும் தாங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்.
—19—

(5) நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.
—20—

(6) இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.
—23—

(7) சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.
—27—

(8) பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.
—58—

(9) உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவி லாதார்.
—140—

(10) கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங்கொல்லோ உலகு.
—211—

(11) ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு.
—215—

(12) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில்.
—233—

(13) நிலவரை நீள்புகழ் ஆற்றின்புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.
—234—

(14) அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.
—243—

(15) அருளில்லார்க்கு அவ்வுலகம்இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகியாங்கு.
—247—

(16) தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின்யாரும்
விலைப்பொ ருட்டால் ஊன்தருவார்இல்.
—256—

(17) மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்ததை ஒழித்துவிடின்.
—280—

(18) கள்வார்க் குத்தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.
—290—

கண்ணதாசன்

(19) உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள்எல்லாம் உளன்.
—294—

(20) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு.
—336—

(21) யானெனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.
—346—

(22) இருவேறுலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியராதலும் வேறு.
—374—

(10-ம் பக்கம் பார்க்க)

புகையிலை நாயனார் புராணம்

பூபதி

வகையிலை என்றுவாடும் வம்பர்க்கு மடங்கள்நல்கும்
முகையிலை முருந்தேனன்னும் முறுவலாள் உமைபங்காளன்
நகையிலை என்றுநாகம் சூடியோன் உலகுபுக்க
புகையிலை நாயனார்தம் புராணம்நான் புகலலுற்றேன்.

மண்ணிலம் உருகிஓட மரம்செடி தளிர்த்து நீட
விண்ணிலம் கீண்ட தென்ன விரிமழை தரையைமூட
கண்ணினுக் கழகுசெய்யும் கதலியும் கரும்பும்செந்நெல்
தண்ணிய வயலுமசூழும் தடவரை மலையனூரில்.

வழிவழி சிவபிரானை வந்தனை செய்துவாழ்வோர்
பழியொழி பெருங்கு லத்தில் பவளமா தேவியார்க்கும்
விழிநுதல் பெருமான்தொண்டு விழைமணி நாதனார்க்கும்
முழுமதி முளைத்ததென்ன முகிழ்த்தனர் முனிவில் முத்தர்.

பத்தராய் வருவார் எல்லோர் பாதமும் பணிந்து போற்றி,
நித்தமும் அவர்க்குவேண்டும் ஊணுடை நல்கி, நாதன்
சித்தம துணர்த்தும்புராணம் செவிமடுத் தின்பில் மூழ்கி,
முத்தராம் தொண்டர்தொண்டர் முடிவிலா துழைத்து
வாழ்ந்தார்.

இவ்வழி முத்தர் வாழ, இமயத்தின் உச்சிவாழும்
செவ்வியன் திங்கள்வைத்த திருச்சடைக் கடவுளுக்கும்,
மவ்வலங் குழலிமங்கை மகேஸ்வரி தனக்கும்ஓர்நாள்
வெவ்விய சொற்போர் ஒன்று விளைந்தது வளர்ந்ததோங்கி;

சிவம்பெரி தோ,அலாது சத்திதான் பெரிதோ, என்று
நவையறு பரமன்கேட்க, நாநிலம் ஊட்டும்அன்னை
சிவம்பெரி தன்றுசத்தி தன்னெதிர், என்றுரைக்க
அவம்அது,உண்மை என்றால் உணர்த்திடென் றறிவன்கூற.

உணர்த்துவென் நொடியில் என்றே உமையெழுக் துருவம்
மாறி,
புணர்ந்தனள் நெஞ்சில்ஒன்று; புகையிலைச் செடியாய் ஏகி,
மனத்தினில் மங்கைபங்கன் தன்னையே நினைக்கும்நல்ல
குணத்தினர் முத்தர்வீட்டுத் தோட்டமே முளைத்தள் அன்றே.

வளர்ந்தஅச் செடியின்மிக்க வளமுடை இலைஇரண்டை
தளர்நடைச் சிறுவன்,முத்தர் தனயன்,போய்க் கொய்துவந்து
களம்உறை கண்டர்தொண்டர் கழிமகிழ் வெய்தக்காட்டும்
வளமுடைத் தூபம்தன்னில் வதக்கினன் குறும்புகொண்டு.

உடனெழுந் தோங்கிநீண்ட உயர்புகை தொண்டர்மூக்கில்
படியவே, உட்கொண்டனனர் பரவச ராகி, எம்மான்
அடியவர்க் கருளும்காலம் அண்டின தோஇப் போது
முடிவிலா மாயை நீங்கி முத்தியும் வினவ தென்றார்.

இவ்வருட் செய்திகேட்டே இறும்பூது கொண்ட முத்தர்
கவ்வியின் விழிபழிக்கும் நல்விழி நாதன் போற்றி,
செவ்விய புகையிலையின் திருப்புகை நாசி கொள்ளக்
கவ்வி,மெய்த் தொண்டர் கூற்று கடுகும்பொய் இல்லை என்றார்.

சிறுவனை அழைத்துச்செங்கை தனில்சிறு வெல்லம்வைத்து
மறுவறு குலக்கொழுந்தே, மண்ணினில் சிவத்தை நல்கும்
விறுவிறுப் புடையஅந்த விழுத்தகைச் செடியைக் காட்டென்
றருளிட, தனயன்காட்ட, அடியவர் பணிந்துவீழ்ந்து;

உமைதனை உவந்தோன்தொண்டர் உவந்தருள் புகையிலையே,
நமன்பயம் நீக்கிஇன்பம் நல்கிடும் புகையிலையே,
அமண்பகை போக்கிச் சைவ அறம்வளர் புகையிலையே,
எமைஇனி தாண்டுதுன்பம் எதிர்த்தொழி புகையிலையே.

என்றுமெய் புளகம்கொண்டு, இருகணில் நீர்பெருக்கிக்
கன்றினை ஈன்றுகாக்கும் கறவைபோல் உருகிஉள்ளம்,
தென்றல்தா லாட்டும்அந்தத் திருச்செடி தன்னைச்சூழ
நன்றுயர் மேடைகட்டி, நாளும்பூச னைகள் செய்வார்.

பூசையில் ஓங்கிநீண்ட புகையிலை விதைகள்தன்ன,
ஆசையோ டடியார் முத்தர் அவைகொண்டு மகிழ்ந்துளம்பி,
மாசைநெல் கொழித்துச் சாயும்மண்ணெலாம் விதைக்க, வஞ்ச
வேசையின் ஆசைபோல விளைந்தன சைவநாற்று.

நெல்விளை கழனியெல்லாம் நீண்டிடும் புகையிலையே,
பல்விதக் கீரைஈனும் பாத்திகள் அனைத்து மஃதே,
மல்கிய கன்னல்ஓங்கும் வயலெலாம் புகையிலையே,
சொல்வதென் முத்தர்கண்ட இடமெலாம் புகையிலையே.

வருமறைச் சைவத்தொண்டர் அனைவர்க்கும் அமுதமீந்து,
பொருவறு புகையிலையைப் புனிதமாய்ப் பதனிட்டேந்தி,
சுருட்சுரு ளாகச்சுற்றி, இலையுறை மூடி,அன்பர்
திருக்கர மவற்றில்நல்கி, திருவிளக் கெடுத்தூட்டி.

ஆளுடை அப்பன்கீர்த்தி அருளிடும் அறத்தீர்வேண்டும்
நாளெலாம் முத்திநல்கும் நற்புகை யிலையிதென்பார்;
காளையூர் கடவுள்தொண்டர் களிமிகக் கொண்டு,காலை
மாலையென் றறிகிலாது மயங்குவர் புகையுள்ளேற்றி.

நடக்கையில் சுருட்டு, நம்பன் தொழுகையில் சுருட்டு, வீழ்ந்து
கிடக்கையில் சுருட்டுப்பல்லை விளக்கவும் பெருஞ்சுருட்டு,
படுக்கையில் உறங்கும் போதும் பக்கலில் சுருட் டெரிந்து
எடுத்தெறி வேளைவந்தால் இன்னொரு புதுச்சுருட்டு

இப்படி அன்பர்க்கெல்லாம் புகையிலைத் தொண்டியற்றி,
அப்பனின் அடியில்உள்ளம் ஆழ்ந்திடுகார ணத்தால்,
ஒப்பிலா முத்தர்நாமம் ஒளிந்ததப் பெயர்க்கு மாறு
இப்புவி முழுதும்தங்கும் இன்னொன்று பரவிற்றன்றே!

புகையிலை நாயனார்என் புகழ்ப்பெயர் பூத்துமண்டி,
இகபர லோகமெங்கும் இனிதினில் பரவச்சைவம்
உகந்திடு தொண்டர்ஓடி வந்தருள் புகையுட் கொண்டு
பகவனை மறந்தார்முற்றும் புகையிலை மகிமைஎன்னே!

பனிவரை நாதனுக்குப் பணிவிடை செய்யும்தொண்டர்
முனிவரர், தேவர்,மாதர் முதலியோர் கைலைநீத்து,
கனிவுளத் தன்பர் நல்கும், புகையிலைக் காதல் மிக்கு
நனிவிருப் புடனயந்து நண்ணினர் மலையனூரை

தன்பெருந் தவயோகத்தின் நடுவினில் வழக்கமாகப்
பண்ணிசைத் தாடும்தெய்வப் பாவையர் சதங்கைநல்கும்
இன்னொலி செவியில்வீழா திடுக்கணுற் றமுன்றுகண்ணை
பொன்வணச் சிவனார்மெல்ல விழித்தனர் வியப்பி லாழ்ந்தார்;

எங்குளர் எந்தன்பத்தர்? எங்குளர் முனிவர்,தேவர்?
எங்குளர் சத்தமாதர்? எங்குளர் தொண்டர்என்று
எங்கணும் தேடித்தேடி இளைத்திடும் சிவபிரானார்
பொங்கிடு சினத்தினோடு புகுத்தினர் ஞானப்பார்வை.

மலையனூர் வீதியெல்லாம் மடிவிலா அடியார்கூட்டம்
அலைஅலை யாகநீலப் புகை எழச் சுருட்டிழுக்கும் .
கலைதனைக் கண்டஎம்மான் கனல்விழி பூத்தனைத்தும்
மலைமகள் செய்தவேலை எனமனம் புழுங்கிநொந்து;

உமையவள் பெருமைக்கிப்போ துலைவைப்பென் என்எழுந்தே
இமயம்விட் டிழிந்துபோந்து, இம்பரின் வடிவுகொண்டு
கடகமன மணக்கும் காவுசூழ் மலையனூரை
இமைநொடிப் பொழுதில் சேர்ந்து, இருமினர்பெருமை
தோன்ற;

சுருள்புகைப் படலம்மூழ்கிச் சொக்கிடும் தொண்டர்கூட்டம்
அருள்தகை இறைவன்தன்னை அவமதித் தொதுக்கிநீக்க,
இருள்நிறை கண்டர்நெஞ்சம் எரிந்து சோராகஏகி,
உருள்சுருட் டாய்ந்துநல்கும் ஒப்பிலா அடியர்கண்டு;

புகையிலைச் சுருட்டினாலே, புனிதரை மயக்கிப்பல்லோர்
நகைக்கிட மாக்கிவைத்தும் நாணம் திழக்க வைத்தும்
சிகைத்தலை கங்கைஏந்தும் சிவனையும் மறக்க வைத்தும்
பகைப்படை வளர்க்கும் நீயோ பரமனுக் கடிமை?பொய்மை.

உன்னையும் கூடியுள்ள புன்மனத் தொண்ட ரையும்
என்னநான் செய்கின்றேன்பார், என்றவர் சினந்தவேளை
பன்னரும் புகழ்படைத்த பழந்தொண்டர் புகையி லையார்
நன்னயத் தோடு நக்குநாதனை வணங்கிச் சொல்வார்,

அய்யனே தங்களைப்போல் அநேகர்இவ் ஊரில்வந்து,
கையவே என்னைவைதார்; நான்பணிந் துணவுநல்கி,
கையிலே ஒருசுருட்டைக் காட்டுவென்; பின்னர் வந்த
மெய்யர்கள் குடித்துமுத்தி இன்பமிதென்று போவார்.

என்றுரை செய்தநாய னுரைஎம் இறைவன் நோக்கி,
நன்றுநீர் எனக்கும்நல்ல அமுதும்ஓர் சுருட்டும்நல்கி,
ஒன்றிய உளத்தினுநும் உளத்தினும் உணரலாகப்
பொன்திகழ் புனிதவீட்டை இன்றுகாட் டெனக்கின்றுர்.

நாயனார் மகிழ்சிறந்து, நாதனர் கொண்டுசென்று,
வாயமிர் தென்னஎண்ணும் வகைச்சுவை அமுதம்நல்கி,
காயவைத் தெடுத்துவைத்த புகையிலை சுருட்டிதந்து,
நேயமாய் நெருப்புமிட்டு நிலத்தினில் பணிந்து வீழ்ந்தார்.

(10ம் பக்கம் பார்க்க)



களம் 14

காட்சி : 14

இடம் : அரசவை மண்டபம்.

நேரம் : காலை.

[அரசவை கூடியுள்ளது. குலோத்துங்கன் உயர்ந்து விளங்கும் சிங்காதனத்தில் கம்பீரமாக அமர்ந்துள்ளான். அவனது வலப்புறம் அமைச்சர் குழு அமர்ந்துள்ளது. இடப்புறம் ராஜ குரு ஈஸ்வரசிவன், சிந்தனை தேங்கிய முகத்தினராய்க் காணப் படுகிறார். புகழேந்தியும் அவ்வையாரும் கடைசியாக வரு கிறார்கள். அவை கையொலி செய்து வரவேற்கிறது. எல்லாப் புலவர்களுமே அங்கு வீற்றிருக்கிறார்கள்.]

ஈஸ்வரசிவன் : (எழுந்து) ஆன்ற தமிழ்ப் பெரியீர்! வாழிய! இன்றைய அரசவைக்கு இலக்கியக் கழகத்து உறுப்பினர் அனைவரையும் மற்றும் புலவர் பலரையும் அழைத்துள்ளதன் நோக்கத்தை உங்களில் பலர் அறிந்திருக்க முடியாது. அறிந்தால், உங்கள் முகங்கள் ஆனந்தக் கடலாக விளங்குமென்பதை நான் அறிவேன். அவ்வளவு இன்ப மயமான செய்தியொன்றைக் குலோத்துங்கன் இன்று அறிவிக்க விரும்புகிறான்.

[கூட்டம் கையொலி செய்தல்.]

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடியும்--அப்போதே மூளைத்த அதன் மொழியும்--சீரும் சிறப்புமாக வளர்ந்து வருவது, அதைத் தாய் மொழியாகக் கொண்ட உங்களுக்கெல்லாம் ஆனந்தம் பயப்பதாகும். அதிலே பெரும் புலமை பெற்றுள்ள நீங்களெல்லாம் ஒன்றைமட்டும் இவ்வளவு காலமாகக் கருதாமலிருக்கிறீர்களே என்பதுதான் குலோத்துங்கனின் கவலையும் என் கவலையும்! புலவீர்! வாழ்க்கை நூலாம் திருக்குறளைக் கொண்ட தமிழ் மொழியில், ஒரு காப்பியம் இல்லையே என்பதுதான் அது...

[புலவர்கள் ஒருவரையொருவர் பார்த்தல்.]

...சந்தேகம் அரவணைக்கிறது...பலரை...அறிகிறேன். நான் சொல்வது இதுதான்...சமஸ்கிருதத்தில் உள்ளது போன்ற அற்புதமான காவியங்கள் தமிழில் இல்லை....

[புலவர்கள் குழப்பம்...அம்பிகாபதி சடக்கென எழுந்து...]

அம் : ஏன் இல்லை! அரசியல் பிழைத்தார்க்கு அறங்கூற்றுதலும் உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும் கூறி, காதல் மனையாளின் கற்புநெறியும் கணிகையொருத்தியின் மாசிலா அன்பும் பின்னிப் பிணைந்து ஓடவிட்டு, நீதி வளைந்தது...நெறி பிறழ்ந்தது...என்றறிந்த உடனே யானோ அரசன் யானே கள்வன் என உயிர்விட்ட மன்னனின் உயர்பண்பைச் சித்தரித்துள்ள சிலப்பதிகாரம் என்ன ஆயிற்று!

ஈஸ் : (சிரித்து) இருக்கிறது அப்படியே! ஆனாலும் அது சாகுந்தலத்தின் தளிர்மென்மைக்கும்...பவபூதியின் உத்தர ராமாயணத்திற்கும் ஈடாகாது!

அம் : (ஆத்திரத்தோடு) குருதேவா! இது அரசவை... நீர் ராஜ குரு என்பதால் பொறுத்தேன் இவ்வார்த்தைகளை! செத்து விரைத்துப் பாடையில் கிடக்கும் சீரழிந்த சமஸ்கிருதத்தின் மடியிலே புரண்டு கொண்டிருக்கும் உங்களுக்கு, தமிழில் காவியம் இருப்பதோ...அதன் பெருமையோ தெரிய நியாயமில்லைதான்! காட்டுக்குப் போனான்; கற்பழித்தான். வீட்டுக்குத் திரும்பினான்... மறந்துவிட்டான்! பாட்டுப்பாடிப் பரவசமெய்திக் கூடியிருந்தது...குறியாகத் தோன்றி... "தாயாகப்போகிறேன்...நீதான் அதன் தந்தை" என ஓடிவந்தபோது, "எங்கே பார்த்தேன்? எப்போது பார்த்தேன்? யார் நீ?" எனக் கேட்டான்...அவன் ஒரு மன்னன்...குருதேவா! நாற்றம்பிடித்த இந்தக் கற்பனையை நளின மாகச் சொல்லிவிட்டதாலேயே சாகுந்தலம் உயர்ந்த காவியமாகிவிடாது! கர்ப்பிணியைக் காட்டுக்கு விரட்டினான். அவள் அற்புதமான ஒரு குழந்தையைப் பெற்றாள்...அதுவும் போதாதென்று ஒரு முனிவன் தர்ப்பையினாலே குழந்தையும் செய்தான்...அவை, தன் அப்பனையே ஆழம் பார்த்தன...இதுதானே உத்தர ராமாயணம்! பண்புகெட்ட இந்தக் காவியங்களைத் தானே இணையற்றவை என்கிறீர்கள்!

ஈஸ் : அம்பிகாபதி! அளந்துபேசு! நீ சமஸ்கிருத பாஷையையும் துவேஷித்து, அதன் பண்பையும் இகழ்கிறாய்!

அம் : பண்பா! சமஸ்கிருதத்துக்குப் பண்பா! (சிரித்து) முறையற்ற கேவலச் செய்கைகளுக்கெல்லாம் மூல இடமாக விளங்கும் சமஸ்கிருதத்துக்குப் பண்பா! உத்தர ராமாயணத்தில் இரண்டாவது பிள்ளை, குசன், தர்ப்பைக் குப் பிறந்தானா, அல்லது அந்த முனிவனுக்கே பிறந்தானா என்று ஊரார்க்குச் சந்தேகத்தைக் கிளப்பும் சமஸ்கிருதத்துக்குப் பண்பா!...

குலோத் : அம்பிகாபதி! சுவைக் குறைவான இந்த விவாதத்தை நான் விரும்பவில்லை.

ஒட்டக் : (எழுந்து) என் கருத்தும் அதுவே!

வாணியன் : (எழுந்து) யானும் அவ்வாறே!

அம் : மன்னா! இதை நானே விரும்பவில்லை. ஆனாலும் குருதேவர் துவக்கிவிட்டாரே...பதில் சொல்லாமல் இருக்க முடியுமா?

வாணியன் : அரசவையில் பெரும் புலவர்கள் பலர் இருக்கிறார்கள். சிறுவனான நீ இதற்கு ஆட்டம் போடவேண்டியதில்லை!

அம் : இருக்கிறார்கள்! பெரும்... இல்லை... மிகப்பெரும் புலவர்கள்! ஆனால் அத்தனை பேர் ரத்தமும் உறைந்துவிட்டது! இல்லையேல், தமிழில் காப்பியங்கள் இல்லையென்று கூறிய குருதேவரைக் கண்டித்திருப்பார்கள்... கனல் கக்கி யிருப்பார்கள்!

ஒட்டக் : அது குருதேவரின் தனிப்பட்ட கருத்து... அதை நாங்கள் ஒப்புக்கொண்டால்தானே...

அம் : பின் ஏன் வெட்டிப்போட்ட மரம்மாதிரி கிடக்கிறீர்கள்?

குலோத் : அம்பிகாபதி! நீ அமரலாம்!

[இப்போது சாளரத் திரைச்சேலையை நீக்கியவாறு மேன்மாடத்தில், அமராவதி தன் தோழியோடு வந்து அமர்கிறாள்.]

குலோத் : புலவீர்! இதுபோது, ராஜகுரு கூறிய கருத்தினைக் கேட்டு, உங்களில் யாராவது வருந்தியிருந்தால், அதற்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். ஆனாலும் தமிழிலே இன்னுமொரு நல்ல காப்பியம் தோன்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே அவர் அதைக் கூறினார். சுருங்கக் கூறின், வான்மீகி ராமாயணத்தைத் தமிழில் பாடவேண்டும் என்னும் வேண்டுகோளை விடுமுகத்தான், முன்னுரையாகத்தான் அந்தக் கருத்தினைக் கூறினார். அதுகேட்டு, அவதியுறாது ஆத்திரப்படாது வீற்றிருக்கும் மகாகவி கம்பர், புகழேந்தியார், அவ்வையார் ஆகியோரது அமைதியை, இந்தக் கருத்துக்குச் சாதகமாகக் கொள்ளலாமா?

[இப்போது அம்பிகாபதி திடுக்கிட்டுத் தந்தை கம்பனிடம்...]

(மெதுவாக) அம் : அப்பா! மறுத்துரையுங்கள்! உம்... மானம் போக இடங்கொடுக்காதீர்கள்! உம்...

கம் : (எழுந்து) திரிபுவன வீரதேவா! தமிழில் இன்னும் காப்பியங்கள் தோன்றுவதை நான் வரவேற்கிறேன்... ஆனால்...

(மெதுவாக) அம் : ஐயத்தில் நிறுத்தாதீர்கள். உறுதியாகக் கூறி விடுங்கள்!

குலோத் : கவிமன்னு ! ஐயத்தை நானறிவேன். ஆனுல் குலோத் துங்கன் தமிழுக்கு இழிவையோ அழிவையோ தேடுவான் என்று நினைக்கிறீரா ?

கம் : இல்லை...பொன்னி வளநாடன்மீது எனக்கு அந்த ஐயம் இல்லை......

குலோத் : அப்படியானுல் என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண் டும்...புலவர்களுக்குப் பொதுவாகவே வேண்டுகோள் விடுத்தோம்...இப்போது தனியாக உம்மையே கேட் கிறோம். வான்மீகி ராமாயணத்தை நீரே தமிழில் பாட வேண்டும்.

கம் : (குழப்பத்தோடு) மன்னு...

[எழுந்து]

அம் : இல்லை ! அந்த இழிசெயலைக் கம்பர் செய்யமாட்டார்... அவர் மகாகவி என்பதால் அல்ல...அம்பிகாபதியின் தந்தை என்பதால்.

குலோத் : (சிரித்து) ராமாயணத்தைத் தமிழில் பாடுவது இழி செயலா !

அம் : ஆம் ! ஐயந்திரிபற ! சமஸ்கிருத மரபு வேறு...தமிழ் மரபு வேறு ! தமிழரின் கனவில்கூடத் தோன்றமுடியாத கதைகள் சமஸ்கிருத மரபினரின் காரியங்களாக நடந் திருக்கின்றன ! பிறன்மனை நயவாத பேராண்மை, தமிழ் மரபு. எவன் மனையானுலும் சரி...மந்திரத்திலே மாசு தீர்ந்துவிடும் என்பது சமஸ்கிருத மரபு. மயிர் நீப்பின் வாழாக்கவரிமான் மரபு, தமிழ்மரபு...மானம் போயி னும் வாழ்வது நலம் என்பது சமஸ்கிருத மரபு ! திங்கள் போற்றுதல் தமிழ்மரபு...சிலையைச் சுற்றுதல் சமஸ்கிருத மரபு '...இரண்டுக்கும் எணிவைத்தாலும் எட்டாது... எடுத்துச் சேர்த்தாலும் நிலைக்காது ! மன்னு! இதுவரை தமிழில் இல்லாத ஒரு செயலைச் செய்யும்படி ஆணையிடா தீர்கள் ! மண்டியிட்டுக் கேட்கிறேன்.

குலோத் : இதுவரை இல்லை என்பதால்தான் வேண்டுகோள் விடுக் கிறேன். குலோத்துங்கன் காலத்திலே ஒரு மகாகாவியம் பாடப்பட்டது என்கிற பெருமையை அடைய நான் ஆசைப் படுகிறேன்.

அம் : கணக்குத் தவறு ! அது பெருமையாகாது ! அரசவைப் புலவரின் மனவளத்தை ஆரியக்கற்பனையின் பால் திருப்பி விட்டார் குலோத்துங்க மன்னர் என்று உலகம் பழிக்கும்! ஆம் ! பழிக்கும் ! அது பெருமையா !

குலோத் : கற்பனை, ஆரியக்கற்பனை, தமிழ்க்கற்பனை என்று அணி வகுப்பதில்லை, அம்பிகாபதி...

அம் : இல்லை...ஆனுல் ஆரியக்கற்பனையே, தமிழ்க்கற்பனையாகி ஆர்ப்பரிக்கக் கூடாதென்பதே நான் கூறுவது !

குலோத் : எந்தக் கற்பனையும் மற்றொன்றின் சாடைகொண்டுதான் இயங்கும்.

அம் : தவறு ! தவறு! முக்காலும் தவறு ! இன்றுவரை, தமிழ்க்கற்பனை நிழலுக்குக்கூட வேரிடத்தில் ஒண்டிய தில்லை ! அதோடு அது மனிதத் தன்மைக்கு அப்பாற் பட்டும் நின்றதில்லை. வாழ்க்கையோடியைந்த இலக் கியம்...இலக்கியத்தோ டியைந்த வாழ்வு...இதுதான் தமிழர் பண்பு...அகமென்றும் புறமென்றும் வகுத்த வனே தமிழன்தான் ! எதன்சாடை இருக்கிறது அதிலே ! அறம்பொருள் இன்பம் என முப்பால் வகுத்து மொழிந் தானே வள்ளுவன், அது எதன்சாடை.

ஒட்டக் : (எழுந்து) மனு தர்மத்தின் சாடை என்று கருதப்படு கிறது...அரசவைப் புலவர்கள் சிலரால் !

அம் : யார் சொன்னது அப்படி ! கொண்டுவாருங்கள் அவரை ! வாழ்க்கைக்கு நியதி வகுத்த வள்ளுவப் பெருந் தகைக்கு மாசு நேரும் வண்ணம், மனு தர்மத்தின் சாடையென்பாரைக் கொண்டுவாருங்கள் இங்கே ! துண்டிக்கிறேன் நாவை ! ஒரே கருத்து, இருவரின் மனத் தினின்று பிறக்கும்-அதனை, ஒன்றின் சாடை என்றென் பது முழு மடமை !

குலோத் : உனது விளக்கங்கள் சரியாகவே இருக்கட்டும். ஆனுல், அவை இராமாயணத்தைத் தமிழாக்க விரும்பும் என் கருத்தினை மாற்றமுடியாது ! அம்பிகாபதி ! நீ இளைஞன். உட்கார் ! (கம்பனிடம்) கம்பநாட ! என்ன உமது எண்ணம்... ?

[பெருமையோடு]

அம் : அவர் அம்பிகாபதியின் தந்தை! இலக்கிய மனவளம் - தவழ்ந்துவரும் கற்பனைத் தென்றல்-அவரது சொத்துக் கள்! அவர் இந்த, மொழியாக்கக் குருட்டுவேலைக்கு உடன்படமாட்டார் !

ஈஸ்வர் : இல்லையேல் கூத்தர் இருக்கிறார்...கொஞ்சு தமிழ் பாடும் வாணியன்தாதன் இருக்கிறார். உலகு புகழப்போகும் இந்த உன்னதச் செயலை மறுத்துரைக்கும் அளவுக்குப் பித்தர்களல்ல, அவர்கள் !

கண்ணதாசன்



கூத் : ஆம்! திரிபுவன வீரதேவர்! நான் இருக்கிறேன் ! சொல் வளம் உண்டோ இல்லையோ...என்ற சந்தேகம் எனக் கில்லை. நம்மால் முடியுமா என்ற தொடை நடுங்கி மனப் பான்மை எனக்கில்லை!

வாணியன் : யாமும் அவ்வாறே!

குலோத் : கம்பரே! என்ன சொல்கிறீர்? இந்தப் பெருமை கூத்தரைச் சாரட்டுமா ?

அம் : சாரட்டுமே ! காட்டிக்கொடுக்கும் கயவர்களுக்குத்தான் வீடணனைப் பற்றிப் பாடும் பெருமை வேண்டும் ! மகாகவி கம்பருக்கு அது தேவையில்லை !

கம் : (முடிவுக்கு வந்தவன்போல) இல்லை! மன்னு! இன்றே இராமகாதை பாடத் துவங்குகிறேன்!

[திடுக்கிட்டு]

அம் : ஆ! அப்பா!

குலோத் : இல்லை! அவர் மகாகவி கம்பர்! அதனுல்தான் ஏற்றுக் கொண்டு விட்டார் ! கம்பநாட ! அரியாசனத்தில் அரச ரோடும்மைச் சரியாசனம் வைப்பாள் தமிழ்த்தாய்!வாழிய நீர் !

ஈஸ் : வாழிய கமபநாடன் !

கம் : (அம்பிகாபதியிடம்) மகனே !

அம் : (ஆத்திரத்தோடு) இல்லை! நீர் என் தந்தையுமல்ல ! மகா கவி கம்பனுமல்ல ! உணர்ச்சியும் அறிவும் ஒருங்கே அழிந்து, பண்பாடிழந்த பிணம்! சொந்தத்தமிழிலே, சொந்தக்கதையிலே, சொந்தக்கவி பாடச் சக்தியற்ற- சூடுசுரணையற்ற பிணம்! என் தந்தை மகாகவி கம்பர் ! அவர் இறந்துவிட்டார்! "என்னை விரைந்தேற்றுக்கொள் ளாதவேந்துண்டோ ?" என வீரப் பண் இசைத்து, வெற்றி முரசொலித்து, தமிழுக்குக் கம்பன் எனத் தரணியின் புகழ்பெற்று அத்தாணி மண்டபத்திலே அழகுக் கொலு விருந்த மகாகவி கம்பர் இறந்துவிட்டார் ! "சொல்லுங் கள் ஒரு வரி; கம்பன், சொல்லுவான் மறுவரி!" என்று நாடு புகழ்ந்த நாவல்ல பாவலர் கம்பர் இறந்துவிட்டார்! நானிருக்க, என் நாவில் தமிழிருக்கக் கவியென்னும் தேனிருக்க, யார் வேண்டும் எனக்கென்று கேட்ட மகா கவி இறந்துவிட்டார்!சூதாட்டக்காரர்கள் காவிய வடிவிலே வந்து அவரை வாரி எடுத்துக்கொண்டு விட்டார்கள்! இராமகாதை பாடப்போகிற கம்பர், மானமிழந்த கடைக்குணத்தார்.ஆம்! நெறிகெட்ட ஒருத்தி-பலங்கெட்ட கலைவன்-அவர்களின் முறைகெட்டநடத்தை-துரோகியின் வீடணம்-தூயவன் கொலை-என ஒழுக்கங்கெட்டு இனப் பகை கக்கும் இழிந்த காவியத்தை தமிழரங்கேற்றப் போகும் கம்பர், நாய் மிதிக்க, ஆள்மிதிக்க, நடுத்தெரு வில் மலர்ந்த மலர் ! ஆம் ! ஆம் ! கம்பர் மனித உலகி லிருந்து மறைந்துவிட்டார்.

கம் : (ஆத்திரத்தோடு) நிறுத்து! அம்பிகாபதி! தமிழ்ப்பண்புக் கேற்பத்தான் இராமகாதையை மாற்றிப்பாடப்போகிறேன்!

(சிரித்து)

அம் : தமிழ்ப் பண்புக்கேற்பவா! எப்படி...நெறிகெட்டவளுக்குப் புதுச்சேலை...கோழைக்கு வீரமருந்து, நாகரிகமற்ற குணத்துக்குப் புது மெருகு, இப்படித்தானே !...கம்பர் எனச் சொல்லப்படுபவரே ! இதெல்லாம் செய்வீர் ! இரா வணன் கொலைக்கு என்ன காரணம் சொல்வீர்! அதை எப்படி மாற்றுவீர்! மறந்துவிடாதீர் ! உம்மைக்கொன்ற கதை அது ! ஆம்; இனப்படி ! பண்புப்படி! மொழியாக்கக் கவிஞரே! அதை முடிக்கும்போது...இராவணன் மடிந்த தாகக் கதையை முடிக்கும்போது..."நானும் மடிந்தேன்; என் இனமும் மடிந்தது !" என்று முடித்துவிடும் ! வரு கிறேன் ! இனி உம்மிடத்தில் எனக்கு வேலையில்லை - என், மானமுள்ள யாருக்கும் வேலையில்லை...வருகிறேன் !

[அம்பிகாபதி வேகமாகச் செல்லுகிறான். கம்பர் குழம்பி நிற்கிறார். புகழேந்தி அரவணைத்துக்கொள்கிறார். மேலிருந்து, ஆச்சரியத்தோடு அமராவதி எழுந்து உள்ளே செல்கிறாள்.]

—காட்சி முடிவு—

(தொடரும்)

ஒரு கதை...

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

...வில்லையானால்,ஜப்தியும் வாரண்டும் வந்துவிடும் என்று மிரட்டவும் ஆரம்பித்தார். கௌரவமாக வாழ்ந்தவர்கள் குண்டூசி முனையளவு கேவலப்பட வழி பிறந்து விட்டால்கூட மனதை இழந்துவிடுகிறார்கள். அவர்களின் பட்டியலில் சேர்ந்தவர் காசிநாதனின் தந்தை கலிங்கத்தேவர். அவர் அடிக்கடி மகனின் மனதை மாற்ற முயலுவதும், மகன், விரைவிலே கடனைக் கட்டிவிடுவதாகச்சொல்லுவதுமாக ஒருவாரம் ஓடிவிட்டது. செல்லப்பர் தந்த தவணை முடிய இன்னும் மூன்று நாட்களே பாக்கி.

★

நடுநிசி!

"அய்யோ, இன்னும் ஒருவாரம் பொறுக்கக்கூடாதா, செல்லப்பரே, செல்லப்பரே,என் கையிலா விலங்கு மாட்டுகிறீர்கள்; வேண்டாம் செல்லப்பரே, போலீஸ்காரர்களைப் போகச்சொல்லுங்கள்" என்று கலிங்கத்தேவர் கத்தினார். மனைவி தாயம்மா அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தாள். கலிங்கத்

எஸ். எஸ். தென்னரசு

தேவர் தூக்கக் கலகத்தில் அவ்வாறு கத்தியிருக்கிறார். "தாயம்மா, கெட்ட சொப்பனம் கண்டேன். அதுதான் இப்படி......!

"சரி, படுங்கள்"-என்று சொல்லி அகல முயன்றாள் தாயம்மா.

"தாயம்மா, காசியைப் பாரு; இவ்வளவு சத்தத்திற்குமா அவன் தூங்குகிறான்?"

தாயம்மா காசியின் படுக்கையறைக்குப் போய்ப் பார்த்தாள். அவளால் பதிலொன்றும் தன் கணவனுக்குச் சொல்லமுடியவில்லை. "ஓடியாங்க, ஓடியாங்க!" என்று கூச்சல்போட்டாள். கலிங்கத்தேவர் தட்டுண்டு தடுமாறி காசியின் படுக்கையறைக்கு ஓடினார். படுக்கையில் காசியில்லை. பெரிய பணப்பையொன்று கட்டிலின் அடியில் இருந்தது. அந்தப் பையின் கழுத்தில் "இந்த ரூபாய், ஐயாயிரத்தையும் நீங்கள் செல்லப்பருக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காகக் கொடுத்துவிடவும்" என்று ஒரு துண்டுக்காகிதத்தில் எழுதிக்கட்டப்பட்டிருந்தது. மகனைக் காணவில்லையே என்ற கவலை அவரது தொண்டையைக் கவ்வினாலும், விடிந்ததும் வீடுதேடி வரப்போகும் அமீனாவையும், செல்லப்பரையும், முகத்திலே பணத்தை வீசி எறிந்துவிட வாய்ப்புக் கிடைத்துவிட்டது என்ற தைரியத்தால் தன் மனதைச் சாந்திப்படுத்திக்கொள்ள முனைந்தார். பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு, கை விளக்கை எடுத்துக்கொண்டு நகர்வலம் வரத்தொடங்கினார் கலிங்கத்தேவர். எத்தனை ஆண்டுகள் தன் மக்களோடு பழகி, அவர்களின் குணாதிசயங்களை அறிந்திருந்தாலும், ஆடு மாடுகள் ஓடிப்போனால், கொண்டித் தொழு, குட்டிச்சுவர்களில் தேடுவதைப்போலவே, மகனே, மகளோ, ஓடிப்போய் விட்டால், இந்தத் தமிழ்நாட்டுப் பெற்றோர்கள் குளம், குட்டைகளில் தான் முதன் முதலில் வலைபோடுகிறார்கள். எவ்வளவு கேவலம்! படித்துப் பட்டம்பெற்ற தன் மகனை கலிங்கத்தேவர் தாமரைத் தடாகத்திலே தேடினார், ஆற்றுக்குள் தோண்டப்பட்டிருக்கும் குடிதண்ணீர் ஊற்றுக்குள் தேடினார். பட்ட மரங்கள், பாசிபடிந்த நீர்க்கிடங்குகள்-கலிங்கத்தேவர் தேடாத இடமில்லை. படித்தவனுக்கும், படிக்காதவனுக்கும்,சாவுப்பட்டணத்திற்குப் போவதிலேகூட பாதை வேறுபாடு உண்டு என்பதை கிராமத்திலே வதியும் கலிங்கத்தேவருக்கு எப்படித் தெரியப்போகிறது. படித்தவன் தூக்கிட்டுக்கொள்வது அரிது; படித்தவன் தண்ணீரில் மூழ்கிச் சாவது மிகஅரிது. மின்சாரத்தில் கைவைத்து மடிவான்; மைக் கிண்ணத்து நஞ்சுத்துளியை குடித்துச் சாவான்; கறுப்பனும் காத்தானும் அப்படியா சாகிறார்கள்; தாமே குத்திக்கொள்வதும் நெருப்பிட்டுக்கொள்வதும் தானே அவர்களுக்கு சாவதற்கு வழியமைத்துத் தருகின்றன.

காசிநாதனைத் தேடித்தேடி சோர்வு கண்ட கலிங்கத்தேவர் சோகத்தில் மூழ்கிப்போனார். எந்தப் பொருளைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ அந்தப் பொருள் அழிந்தது, செத்தது என்று யாராவது சொன்னால் நமதுள்ளம் என்ன பாடுபடும்; அந்த நேரத்து இதயத் துடிப்பு விமானத்தின் காற்றாடியையும் தோற்கடித்திடுமே! கலிங்கத்தேவருக்கும் அத்தகைய செய்தி தான் காலை எட்டு மணிக்கு எட்டியது; ஆனால் கலிங்கத்தேவரின இதயம் துடிக்கவில்லை. ஏன், அவர் கல்நெஞ்சக்காரரா; இல்லை; இதயத்திற்கு துடிக்கவே சக்தியில்லாமல் நின்றுவிட்டது. நாடிநரம்புகள் 'ரிட்டையர்டு' ஆகிவிட்டன. கலிங்கத்தேவர் காலமானார். சொந்த மகன், சொத்தை இறைத்துப் படிக்கவைத்த செல்வக் குமாரன், கொலை செய்யப்பட்டான்; தலை வேறு, முண்டம் வேறாக துண்டித்துக்கிடக்கின்றன என்ற சேதி கிடைத்தால் பாசமுள்ள தந்தையின் உயிர் உடலிலா நிற்கும்! மகனின் உயிரைத்தேடி, ஓடிப்போ, ஓடிப்போ, என்று ஜிலட்டு உயிரை அடித்துவிரட்டும் அதிர்ச்சி தானே ரத்தபாசமெனப்படுவது!

ஊரே திரண்டு, கொலைக்களத்திற்கு ஓடியது; இத்தனை காலமும், தேங்காயும், சூடமும் ஏந்தி தேவனைக் காணப்போகிறோம் என்று போனார்களே அந்தக் கிராமத்து மக்கள், இன்று அந்தக் கோயிலுக்குள்தான் ஓடினார்கள் எல்லோரும். கோயிலா கொலைக்களம்? ஆம்; கோயில்தான்! அங்கேயா காசிநாதன் வெட்டப்பட்டுக்கிடந்தான்? அங்கேயாதான்! ஆனால் காசிநாதன் மட்டுமல்ல! காசிநாதனுக்காக செல்லப்பர் வளர்த்த மகளும் வெட்டப்பட்டுக் கிடந்தாள். சூலாயிதத்தையே சிலையாக எண்ணி வணங்கிய அந்தக் கோயிலில், வழக்கமாக சூலாயிதத்தில் குத்தி வைக்கப்பட வேண்டிய எலுமிச்சம் பழத்திற்குப் பதிலாக காசிநாதனின் தலையும், செல்லப்பரின் மகள் தலையும் சொருகி வைக்கப்பட்டிருந்தன. சூலாயிதத்தின் வழியாக ரத்தம் வடிந்து, உண்டியலுக்குள் ஊற்றிக்கொண்டிருந்தது. வீரனையும் கோழையாக்கும் அந்தக் கோரக்காட்சியைக் கண்ட அந்தக் கிராமமே 'இழவுவீடு' ஆகியிருந்தது.

கிராமாதிகாரி வீரப்பர், எந்த ஏழை விவசாயிடம், எந்தப் பொய்யைச் சொல்லி எவ்வளவு பணம் பிடுங்கலாம் என்று திட்டம் தீட்டி முடித்துவிட்டு, தன் வீட்டுக்கெதிரேயுள்ள பூவரசுமரத்திலே கட்டித் தொங்கவிட்டிருந்த தபால்பெட்டியைத் திறந்தார். மூடிய கடிதமொன்று கிடந்தது;

அன்புள்ள கிராமாதிகாரிக்கு,

இன்று இரவு நான் சாகப்போகிறேன்; நாளைக்காலை காவல் குளத்துக்கரையில் என் பிணத்தை நீங்கள் பார்க்கலாம். நான் ஏன் சாகவேண்டும் என்கிறீர்களா? செல்லப்பரின் மகளுக்கும், எனக்கும் நீண்டநாட்களாக தொடர்புண்டு. தினந்தோறும் கோயிலிலே சந்திப்போம்; சூலாயுதத்தின்மீது ஆணை கூறி அவள் என்னை மணமுடித்துக்கொள்வதாக உறுதி சொன்னாள். நான் நம்பினேன். ஆனால் சென்றவாரம், ஒருநாள் இரவு கலிங்கத்தேவரின் மகனும், செல்லப்பரின் மகளும் நந்தவனத்தில் இருந்ததைப் பார்த்தேன். காசிநாதன் காலில் விழுந்து செல்லப்பர் மகள் கெஞ்சியதை என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. இன்று இரவே, இருவரையும் தனித்தனியே சந்தித்து வெட்டிக்கொன்று, எந்தச் சூலாயிதத்தின்மீது அவள் ஆணை சொன்னாளோ, அதோ சூலாயிதத்திலேயே அந்த கள்ளக்காதலர்களின் தலைகளைச்சொருகிவிட்டேன். அந்த இரட்டைக் கொலையைச் செய்தவன் நான்தான். இனி நான் வாழவிரும்பவில்லை. என்னை வாழவைத்துக்கொண்டிருந்த இன்னொரு உயிர் போய்விட்டபின் நான் ஏன் வாழவேண்டும்?'காதல்வைரி'

கிராமாதிகாரி தலையாரியைக் கூட்டிக்கொண்டு ஓடினார் காவல் குளத்திற்கு. அப்போதுதான் அந்த உடல் உயிரை இழந்து விறைத்துக்கொண்டிருந்தது. தலையாரி பிணத்தைப் புரட்டிப் புரட்டிப்பார்த்தான். வேறு யாருமில்லை; கிராமாதிகாரியின் தம்பி வச்சிரவேலுதான் அவன்.

★

வச்சிரவேலுவை, செல்லப்பரின் மகள் விரும்பியது உண்மைதான். சூலாயுதத்தின்முன் ஆணையிட்டதும் உண்மைதான். ஆனால்,அவள் காசிநாதனை விரும்பினாள் என்பதை எப்படி உறுதிசெய்யமுடியும்?

நாளையோடு தவணை முடிகிறது; கலிங்கத்தேவரால் ஐயாயிரத்தை தன் தந்தைக்கு திருப்பித்தர முடியாது; எனவே, காசிநாதன் தன்னை மணக்க முடிவுசெய்து விடுவான்; அவ்வாறு முடிவு செய்துவிட்டால், வச்சிரவேலுவைத் தான் காதலித்தது என்னவது என்று அஞ்சிய செல்லப்பர் குமாரி அந்தப் ஐயாயிரத்தை, யாரும் அறியாத வேளையில் காசிநாதனின் படுக்கையறையில் வைத்துவிட்டு, கடனைத் தீர்த்துவிடும்படி எழுதி வைத்துவிட்டு வருகையில், எதையோ குறிக்கோளாகக் கொண்டு வேகமாக நடந்துகொண்டிருந்த காசிநாதனை சந்திக்க நேர்ந்ததும், அப்போது செய்தியை விளக்கி காசிநாதனின் காலிலே விழுந்து கெஞ்சியதும், அதே இரவில் நாளை தவணை முடியப்போகிறதே, எப்படியாவது காசிநாதனை தீர்த்துவிடுவது என்ற முடிவோடு வந்த வச்சிரவேலு தன் காதலி, காசிநாதனின் காலில் விழுந்து கெஞ்சியதைக் கண்டு இருவரையும் அவன் வெட்டியதும் இதுவரை யாருக்கும் தெரியாது.

★

கோயில் மூடப்பட்டது, கோபுரத்திலே செடி கொடிகள் பின்னிவிட்டன. யாரும் கோயிலை நெருங்குவதில்லை. சிற்பங்களில் சொட்டை விழுந்துவிட்டன.

வெளிவந்து விட்டது!

கண்ணதாசன்

எழுதிய

ஆயிரம் தீவு

அங்கயற்கண்ணி

விலை ரூ. 4-8-0

கிடைக்குமிடங்கள்:

அருணோதயம்

சென்னை-14.

★

அருணா பப்ளிகேஷன்ஸ்

சென்னை-17.

தோழர்களே!

ஓர் இன்பச்சேதி!

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

எழுதும்

புதிய தொடர்கதை

ஆகஸ்டு 20-ம் தேதி

இதழில் ஆரம்பமாகிறது

ஆம்; ஆகஸ்டு 20

நினைவிருக்கட்டும்!

[புகையிலை நாயனார் புராணம் கவிதை வடிவில் நீண்டுவிட்டதால் 'கல்லக்குடி மாகாவியம்' இளைத்துவிட்டது. அடுத்த இதழில் முழுப் பக்கத்தோடு, காவியம் முடியும்.]

கல்லக்குடி மாகாவியம்

——— கண்ணதாசன் ———

(5)

அணிபிரித்த படலம்

உறங்கிவிழும் ஊராரை உசுப்பிவிட நாள்தோறும்
இறங்கியுள மாளிகைவிட் டேறிவரும் செங்கதிரோன்
மறந்துவிட்டான் கண்மலர! வாருங்கள் அன்னவன்கண்
திறந்துவிடு வோமென்றே சீராளர் முந்துகிறார்?

சீராளர் முந்தியதைச் செஞ்ஞாயி றறியாமல்
மாறாத வழக்கம்போல் வருவதற்குத் திட்டமிடும்
ஆறாத நெஞ்சினரோ அங்கதிரோன் தனைக்கூவி
''வாராய்'' எனஅழைத்தார் மனம்பொறுக்க மாட்டாமல்!

காளையர்தம் எண்ணத்தைக் கதிரறிந்தான்! ஆனாலும்
பாளைமணம் கமழ்கின்ற பாவையர், தம் கண்ணாளர்
தோளிருந்து நழுவிஉடற் சுகமயக்கந் தீருகிற
வேளையில்தான் வெளிவந்தான் வீற்றிருந்த எல்லைவிட்டு!

ஆழியலை சிவக்க, அவனியுளார் மெய்சிலிர்க்க
தாழைப்பனி பறக்கத் தாய்ப்பறவை பாட்டிசைக்க
பாளம் பிளந்ததுபோல் பரிதிஇறை மெய்விளக்கிக்
கீழைத் திசைக்கடலில் கேள்விக்குறி வடித்தான்!

(வேறு)

''கல்லக் குடியழகு கதிரழகால் மிஞ்சியதோ
கதிரழகு தானிந்தக் குடியழகால் விஞ்சியதோ!
வெல்லுந் தமிழ்க்குடியின் வீரத்தைப் பாடிவிட
பல்கோடிக் கோலெடுத்துப் பாய்ந்தானோ செங்கதிரோன்

எங்கெங்கும் எங்களவர்! எல்லாரும் எங்கள்மயம்!
அங்கிங் கெனாதபடி ஆர்ப்பரிக்கும் தமிழர் மயம்!
பொங்கும் உணர்ச்சிமயம்! பூரிக்கும் மேனிமயம்!
புன்னகையில் போர்முழக்கும் தென்னாட்டு வீரர்மயம்!

பாடி வீடென்பார்கள் பழந்தமிழர்! ஒருசேரக்
கூடுகிற வீரர்தமைக் கொண்டிருக்கும வீடதுதான்!
''சூடுவேன் வாகை!'' எனத் தோள்தட்டும் மாத்தலைவன்
நாடிவரும் வீரர்தமை நடத்திவைக்கும் வீடதுதான்!

பத்தடிக்கு ஒன்றாகப் பரவியுள்ள கீற்றுடனே
சத்தமிலாக் காற்றுக்கும் சாய்ந்துவிழும் மூங்கில்களில்
''இத்தருணம் வீழ்வேனோ!'' என்றிருக்கும்
கொட்டகைதான்!
அத்தகைய பாடிவீ டானதடா வீரருக்கு!

சேயினை மனையாட்டி ஈனுறுகிற வேளையிலே
ஓயாமல் வாசலிலே உலாத்துகிற கணவனைப்போல்
ஆயிரம் பேர்அங்கே ஆணையினை எதிர்நோக்கி
வாய்பார்த்து--போகும் வழிபார்த்து நிற்கின்றார்!

(தொடரும்)

★

வெண்பாப் போட்டி 13.

★

ஈற்றடி :

நெஞ்சிலே யிட்ட நெருப்பு

முடிவு தேதி 6-8-55.

திராவிடக் கழகத்தின் ஆகஸ்டு போராட்டம்

"திராவிடக் கழகத்தினர் தாங்களே கூடி, தாங்களே திட்டம் தீட்டி, ஆகஸ்டு முதல்நாள் நடத்தப் போகும் கொடி கொளுத்தும் போராட்டம் பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்று அறிய பலர் ஆவலுறுகின்றனர்."

"இந்தி எதிர்ப்பு நோக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு முற்றிலும் உடன்பட்ட ஒன்று என்றாலும், கொடி கொளுத்தும் ஆகஸ்டுப் போராட்ட முறை திராவிட முன்னேற்றக் கழகத்தை கலந்துகொண்டு தீட்டப் பட்டதுமல்ல - திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உடன்பாடானதுமல்ல;"

"எனவே, திராவிடக் கழகத்தின் ஆகஸ்டுப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம்கலந்து கொள்ளாது."

"திராவிடக் கழகத்தின் ஆகஸ்டுப் போராட்டம் பற்றி நான், நண்பர்களோடு கலந்து பேசிய கருத்துக் கள் விளக்கமாகவும், தெளிவாகவும் 23-7-55 'திராவிட நாடு' இதழில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன."

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

ஆராயவேண்டாமா?

★ பெண்கள் தையல்வேலை செய்யும்போது நூலை அடிக்கடி கடிக்கும் பழக்கத்தால் அவர்கள் ரத்தம் கெட்டுப்போய் விடுகிறதென்று ஒரு பிரபல வைத்தியர் சொல்லுகிறார்.

★ திக்கித்திக்கிப் பேசுவது காட்டு மனிதர்களிடம் அறவே இல்லையாம், நாகரீக வளர்ச்சிக்கும் திக்குவாய்க்கும் ஏதோ தொடர்பிருக்கக்கூடும் என்கிறார் இன்னொரு ஆராய்ச்சியாளர்.

★ பைத்தியம் பிடித்தவர்களில் கால்பகுதியினருக்கு, அந்தக் கொடிய வியாதி அவர்களின்முன்னோர்களிடமிருந்து பரம் பரையாய் வந்தது என்கிறார் வேறொரு ஆராய்ச்சியாளர்.

பொதுத்தேர்தல்-புதுவேகம்!

காமராஜர் மந்திரி சபை அமைத்த நேரத்தில், காமராஜர் 'வாக்குத்தவறி' விட்டதாக மனதிற்குள்ளேயே நிந்தாஸ்துதி பாடிக்கொண்டிருந்த பாகனேரி ஆர். வி. சாமிநாதன் இப்போது காமராஜர் படத்தை திறந்து வைப்பதும், காமராஜர் கரம்பட்டால் கரியும் பொன்னாகும் என்று புகழ்பாடித் திரிவதுமாக இருப்பது ஏன்?

"தனது சொந்தப் பகுதியான சிவகங்கைத் தொகுதியில் நின்று, அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றிபெற முடியாதென்று முடிவுகட்டி, பார்லிமெண்ட் உறுப்பினர் பதவிக்கு நிற்கப்போகிறார்; அதனால்தான் சாமிநாதனுக்கு காமராஜர்மீது 'புதுமோகம்' பிறந்திருக்கிறது" என்று பாகனேரி வட்டாரத்தில் பேசப்படுகிறதே! இது உண்மைதானோ?

★

தென்னாட்டில் மக்களின் செல்வாக்கைப் பெறமுடியாத பி. சோ. கட்சி, லோகியோ விலக்கப்பட்டதை சாதகமாக்கிக் கொண்டு, பழைய கொள்கைகளை வைத்துகொண்டே புதிய பட்டம் பெற்று தென்னாட்டில் செல்வாக்குப் பெற முயலுவதாகவும், அதையொட்டித்தான் லோகியாவின் தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணமும் நடைபெறுகிறது என்றும் 'காங்கிரஸ்காரர்'கள் சொல்வது உண்மையா?

★

சென்ற பொதுத்தேர்தலிலே வெற்றிபெற்ற கம்யூனிஸ்டுத் தோழர்கள் இப்போது குடியிருக்கிற வீடுகளைக் காலிசெய்துவிட்டு தாங்கள் ஏற்கனவே போட்டியிட்ட தொகுதிகளில் வீடு தேடும் படலத்தில் ஈடுபட்டிருப்பது உண்மையா?

"உலகியற்றியான்" யார்?...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்பால்

(23) இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் உலகு.
—387—

(24) செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக் கிழ்த்தங்கும் உலகு.
—389—

(25) தாமின்புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்.
—399—

(26) உலகம் தழிஇயதொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லதறிவு.
—425—

(27) எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு
அவ்வதுறைவது அறிவு.
—426—

(28) எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.
—470—

(29) நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாதுலகு,
—520—

(30) வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.
—542—

(31) குடிதழீஇக் கோலோச்சும் மாநிலமன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.
—544—

(32) கண்ணோட்டம் என்னும் கழிபெருங்காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.
—571—

(33) கண்ணோட்டத்துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப்பொறை.
—572—

(34) கருமஞ்சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் உலகு.
—578—

(35) உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.
—598—

(36) வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.
—612—

(37) எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.
—670—

(38) அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு.
—841—

(39) உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப்படும்.
—850—

(40) பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.
—874—

(41) இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு.
—970—

(42) நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.
—994—

(43) பண்புடையார்ப் பட்டுண்டு, உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.
—996—

(44) பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.
—1015—

(45) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.
—1025—

(46) சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.
—1031—

(47) உழுவார் உலகத்தார்க்கு ஆனிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.
—1032—

(48) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.
—1062—

இன்பத்துப்பால்

(49) தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.
—1103—

(50) வீழ்வாரின் இன்சொல் பெறுஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.
—1198—

ஆயிரத்து முன்னூற்றுமுப்பது அருங்குறள்களிலும் இவ்வளவு குறள்களில்தான் உலகு—உலகம் வந்துள்ளது. இதில் ஒன்றிரண்டு குறள்களிலாவது, உலகு, நாடாக மிளிருகிறதா? அப்படியானால், ஏன், எப்படி? அடுத்தவாரம் பார்ப்போம்.

புகையிலை நாயனார் புராணம்...

(5 ம் பக்கம் தொர்டர்ச்சி)

புகையைஉள் ளிழுத்துப் பார்த்துப் புத்துணர்வுற்ற எம்மான்
குகையகப் பட்டார்போன்று குழம்பிய உளத்தராகி,
இகபர லோகஇன்பம் இதற்கிணை இல்லை; இன்றே
வகையுறச் சிவலோகத்தின் வாழ்வைநான் துய்த்தேன்
[என்று;

புறத்தினில் தோட்டம்தன்னில் புகையிலைச் செடியைச்
[சுட்டி,
இறப்பவே இன்பம்நல்கும் இதனினும் உலகமீது
பெரியதொன் றில்லைஎன்று பெருமகிழ் வோடுகூறி,
அறிவினால் அறியலாகா ஆண்டவன் மயங்குங்காலை;

ஒண்புகை இலையாய்நின்ற உமை உண்மை உருவில்நின் று,
என்சொலே ஏற்றம்பெற்ற திதற்குநீர் சாட்சி என்ன,
புன்னகை யோடும்ஈசன் புகையைவாய் வெளியே ஊதிப்
பெண்மையே வென்றதென்று புகைத்தனர் பினும்சுருட்டை

சுருட்டு கை சுட்டபின்னர், தொண்டனார் தமைநி னைந்து,
அருள்திரு உருவம்காட்டி அவர்முதல் மற்றும் உள்ள
திருவுடைத் தொண்டர்க்கெல்லாம சிவபதி நல்க,அன்னார்
சுருட்டுகள் கொளுத்தி வாயில்செருகினர் மறைந்துபோனார்,

மலையனூர் சைவத்தொண்டர் மறைந்தபின் கணங்கள்கூவி,
இலைஇலை யாகஎல்லாப் புகையிலை யுங்களைந்து,
மலைமலை யாகக்கட்டி, முதுகின்மீ தேற்றி வைத்து,
மலைமக ளோடும்எம்மான் கைலைமால் வரையடைந்தார்.

புகையிலை நாயனாரின் புண்ணிய புராணம் ஈது;
புகையிலைப் புராணம் இஃதைப் புரட்டினோர், படித்தோர்,
[மோந்தோர்
புகையிலைப் பயிர்விளைத்தோர், புனைசுருட் டுப்புகைப்போர்,
புகைகமழ் முத்தி வீட்டைப் பொருந்துவர் ஐயமுண்டோ?

மறுமலர்ச்சி ஏடுகள்

அறிவொளி	கண்மணி
ஆசிரியர்: பால்வண்ணன்	ஆசிரியர்: பூவண்ணன்
(திராவிடர் முற்போக்கு வார இதழ்)	(சிறுவர் சிறுமியரின் வார இதழ்.)
விலை அணு 2. ஆண்டு சந்தா ரூ. 6	விலை அணு 2. ஆண்டு சந்தா ரூ. 6

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டும் ஏஜெண்டுகள் தேவை!
பத்திரிகைகள் ஆகஸ்டில்வெளிவரும்.
விபரங்களுக்கு:
அறிவொளி, கண்மணி காரியாலயம்
38, சாமிபண்டாரம் தெரு, சென்னை-2

புதிய புத்தகங்கள்

1. முன்னேற்றம் ... ரூ. 1 0 0
ஆராய்ச்சி ஏடு
2. பாண்டி முத்து ... ரூ. 1 0 0
பூவண்ணன் எழுதியது.

சிறுவர் உலகின் தலைசிறந்த பொக்கிஷம்.
வியாபாரிகளுக்கு 30 சதவிகிதம் கழிவு.
தனிப்பிரதி வேண்டுவோர் தபால் பில்லைகள் அனுப்பவும்.
விபரங்களுக்கு:
மக்கள் மன்றம்,
38, சாமிபண்டாரம் தெரு, சென்னை-2.

வெண்பாப் போட்டி

12. வாள்கொண்டு தாக்குவோம் வா !

வெண்பாப்போட்டி 12-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ சிற்றெறும்பு புற்றெடுக்கச் சீற்றரவம் சென்றுபுகும்
பெற்றியினை யுற்றுவந்த பேதைகளின்--வெற்றிக்தி
தூள்கொண்டு போயொழியத் தூங்கும் வரிப்புலியே
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—த. வே. சீனிவாசன், பாப்பாரப்பட்டி.

★

தென்றல் நடைபயின்று தேன்பிலிற்றிப் பார்மணக்க
மன்றில் வளர்ந்ததமிழ் மாதுக்குக்--குன்றநெடுந்
தோள்கொண்ட நெஞ்சுடையாய் ! தொல்லைதரு [வன்பகையை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வளவன், வயலி.

★

வான்புகழ் கொண்டாண்ட வண்டமிழ் நாட்டின்கண்
மேன்மை இலாஇந்தி மீறிவந்தால்--ஆண்மையுடன்
நீள்புகழைக் காத்தற்கு நேரில்நாம் போர்க்களத்தே
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—டி. ஆர். சண்முகம், கோடைமலை.

★

ஓதுகுலப் பார்ப்பான் உயர்வென்னுஞ் சாத்திரத்தை
நீதியது வென்னும் நிலையினரை--தீதுபுரி
நால்வருணக் கோட்பாட்டை கண்பா அறிவென்னும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ந. மு. விசுவநாதன், அரக்கோணம்.

★

வென்றிட்டால் வண்ணமலர் வாகை; மொழிப்போரில்
பொன்றிடிலோ வீரமிகு பொன்னுடு !--குன்றைநிகர்
தோளுயர்த்து ! இந்திதனைத் தூளாக்கச் செந்தமிழாம்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—கே. எஸ். மாணிக்கம், சிவகங்கை.

★

வந்தாரோ வாழ்ந்திட்டார் வாழ்ந்தாரோ வீழ்ந்திட்டார்
அந்தோவன் இந்நிலைக் காளானாய்--எந்தோழா
தான்பணியு மிந்நிலைமை தூள்படவே கூரறிவு
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ஆ. வி. நாதன், கோவை.

★

ஆள்வலிமை கொஞ்சமோ தோள்வலிமை பஞ்சமோ
நீள்புவியி(ல்) நீயடிமைத் தஞ்சமோ--கேள்தம்பி !
தாள்பணிய வைத்தாரைத் தூளாக்கத் துன்னியகூர்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—க. ஆ. கோவிந்தன், கந்தர்வகோட்டை.

★

பெற்ற திருநாடும் பேரின்பத் தாய்மொழியும்
உற்ற பிறப்பின் உரிமைகளும்--மற்றவரால்
மாள்கின்ற தென்றால், மறத்தமிழா ! அன்னவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வ. நடராசன், சென்னை-6.

★

காதல் வயப்பட்டோம் கண்டோம் களவுநெறி
பேதங்கள் கூறிப் பிரிக்கின்றார்--காதலியே !
பாழான சாதிப் பயிர்வளர்த்த ஆரியத்தை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—க. குணசேகரன், சென்னை-3.

மானமுற வாழ்ந்திட்ட மாண்தமிழ ரெச்சம்யாம்
ஈனமுற இந்தியினை யேற்றிடோம்--தானனுங்கின்
ஆள்கொண்ட தானை அணிதனக்கு மஞ்சாதே
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ந. குப்புசாமி, சேலம்.

★

உயர்குறிக்கோ ளொன்றேற்றோ(ம்) ஊறுசெயுஞ் சோம்பல்
அயர்வுடலின் சோர்விடை ஐயம்--பயமிவற்றைச்
சூள்கொண்டு தோழ நுணிந்துமனத் திண்மையெனும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—பெ. வரதராசன், குகை, சேலம்.

★

சுற்றிவரும் இந்தியினைச் சூழவரும் பட்டாளம்
கற்றறிந்த வித்தையெலாம காட்டவரும்--முற்றுமதைத்
தூள்தூளாய் ஆக்கித் தொலைத்துவிடப் போர்வீரா !
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—பாபன், நாங்குனேரி.

★

தொல்லை நெடுங்காலம் தூயதமிழ் நாட்டுவட(க்)
எல்லையாம் வேங்கடத்தை இன்றெமக்கு--இல்லையெனத்
தோள்கொட்டும் ஆந்திரரின் சூழ்ச்சியது வீழ்ச்சியுற
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—மு. சண்முகம், பள்ளத்தூர்.

★

தாள்பணியார்; பின்னின்று தாக்கிட வும் மாட்டாரத்
தோள்வலிமுன் தோற்றாலும் வாழார்மன் !--மீள்வதுமேன்?
தூள்பட்ட வில்லோய் ! தொடுப்கழி விட்டேன்; கை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—அன்புரையன், அம்மையப்பன்.

★

அம்புவிக்குத் தீங்காய் அணு துண்டைச் செய்துவரும்
நம்பகைவர் போக்கில் நரித்தன்மை--தென்படுமேல்
ஆழ்கடல் மீனுக் குணவளிக்க, அன்னவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—சீரான், கோம்பை.

★

சாதி மதத்தோடு சண்டையினைக் கொண்டுவந்த
ஆதி பரம்பொருள் ஆயிரமே;--மேதினியில்
கால்கொண்டு வாழும் கடவுளரைக் 'கொள்கை' யெனும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—இரா. வை எழில், இராங்கியம்.

★

பொய்யும் புனைசுருட்டும் பொல்லாங்கும் சொல்லாமல்
வையமிசைவாழ்தல் மாண்பாகும்--மெய்யன்பா !
கோள் விண்டு வாழ்ந்திய கோழையரைக் கூரான
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

மாயமே இவ்வுலகு மண்ணுதல் திண்ணம்நம்
காயமே பொய்யென்ன கண்மூடித்--தீயுரையால்
வாழ்வழிந்து செந்தமிழர் வாடிடவே செய்பவரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—வித்துவான் இராமநாதன், மகிபாலன்பட்டி.

★

சொல்வளங்கொள் நீந்தமிழ்சூழ் தோழா தமிழ்நாட்டில்
பல்வளனும் சேர்க்கும் பகுத்தறிவாம்--நல்வாழ்வை
கோள்கொண்டு தீங்குசெயக்கூடும் மதியிலரை
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—ரா. சணேசன், தாழைமேடு.

★

அதிருங் கழல்பூண்ட ஆரணங்கே நம்காதல்
உதிரும் படிசாதி ஓதி--எதிரிங்கு
தேள்கொண்ட நஞ்சுடைய தீயோர் எவரெனினும்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—சோ. கணபதி, திருக்கழுக்குன்றம்.

★

மலர்த்தோட்டம் சீர்குன்றி மண்மீதில் தோன்றும்
நிலையாக்கி வாழ்கின்ற நீசர்--குலைநடுங்கி
தாள்பணித் தோடத் தமிழா பகுத்தறிவாம்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—தகடூரான், கூத்தப்பாடி.

★

சாதி மதம்பேசிச் சாத்திரங்கள் தாம்பேசிப்
பேதித் தலைகின்ற பித்தர்சிலர்--நாதியற்ற
ஆள்பலரைத் தோழா அதட்டிநலங் காணுகின்றார்
வாள்கொண்டு தாக்குவோம் வா.

—கி. சந்திரசேகரன், திருக்கழுக்குன்றம்.

◉ பரிசுபெற்ற வெண்பா--பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

கேள்வி கேட்க விரும்பும் தோழர்களை "கேள்விப் பெட்டி, தென்றல், சென்னை-6" என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறோம்.

நா. கலைச்செழியன், உதகை.

உங்கள் கட்சியை தூற்றுவோருக்கு நீங்கள் ஏன் பதில் சொல்லுவதில்லை?

தூற்றல்! அதுதானே எங்கள் இயக்கத்தை வளர்க்கும் இரசாயன உரம்!

எ. பாஜீ, பி.எ., தென்காசி.

கடவுளை அடைய மதம் தேவையா? மனம் தேவையா?

கோட்சேயினுடைய மனமும் மதப்பற்றும் அறக்கடவுளுக்கு தேவையற்றவையாயிற்றே!

எ. வி. ராசன், சென்னை-17.

பாரத ரத்னம் என்றால் என்ன பொருள்?

ஊராள்வோருக்கேற்ப அடிக்கடி உள்ளத்தை மாற்றிக்கொள்ளும் பண்பினர் என்று பொருள்.

கபாலீஸ்வரன், மைலாப்பூர், சென்னை.

மடாலய மந்திரி என்று சொல்கிறார்களே; என்ன பொருள்? இப்படியொரு பதவி மற்ற மாகாணங்களிலும் உண்டோ?

மூடத்தனங்களை வளர்க்கின்ற புராணக்கோயில்களைக் கண்காணிப்பவர் என்று அர்த்தம். இப்படியொரு பதவி மற்ற மாநிலங்களில் இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. அதுவும் மடாலய மந்திரி என்று பகிரங்கமாக போட்டுக்கொள்ளும் துர்ப்பாக்கியம் இனி எப்போதும் எந்த மாநிலத்திற்கும் கிடைக்காது!

சென்ற வியாழனன்று மயிலை விவேகானந்தா கல்லூரி உணவு விடுதியில் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்த பிரபலஸ்தர் ஒருவர் உங்கள் கட்சியை மறைமுகமாக தாக்கி தாக்கிப் பேசிவிட்டு பெருமிதத்தோடு போயிருக்கிறாரே, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

நாங்கள் என்ன செய்வது? எங்கே, எதை, எப்படி பேசவேண்டுமோ அங்கே அப்படி பேசிவிட்டுப் போயிருக்கிறார். எதிர்த்துக் கேட்க அங்கே ஆளில்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். எதைப் பேசினாலும் அங்கு கைதட்டல் கிடைக்குமென்பதையும் அவர் நன்குணர்ந்தவர். எதிரியில்லாத இடத்தில் தானாக வாகையை எடுத்து சூடிக்கொள்வதா வீரம்?

ஏஜண்டுகள் தேவை

அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.

ரூ. 15 முன்பணம் அனுப்பினால் ஆல்பம் வகையறு அனுப்பப்படும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு:—

நூதன்-கம்பெனி,
[காலண்டர் தயாரிப்பாளர்கள்]
திருச்சிராப்பள்ளி

அகல்யாபாய், அடையாறு, சென்னை.

பிரபல நீதிபதி யொருவர் 'கடவுள் கடவுள்' என்று புலம்பிக் கொண்டிருக்கிறாரே! அவருக்கு நான் ஒரு கடிதம் எழுத விரும்புகிறேன், என்ன எழுதுவது?

"பெருந்தகையீர், உமது கடவுள் பக்தி கண்டு மெச்சினோம்; உள்ளபடியே உங்களுக்கு கடவுள் பக்தி இருக்குமானால், சிலருக்கு தண்டனையும் சிலருக்கு அபராதமும் கொடுத்து அனாவசியமாக நீங்கள் ஏன் பாவத்தை ஏற்க வேண்டும்? அனைத்தையும் ஆண்டவன் மீது சுமத்திவிட்டு உங்களுடைய பதவியை ராஜிநாமா செய்துவிடலாம் அல்லவா? உங்கள் பக்தியின் புகழும் பரவும், பாராளும் அரசாங்கத்திற்கு செலவும் குறையும். செய்வீர்களா?" -- இப்படியொரு கடிதத்தை அவருக்கு எழுதுங்கள்.

ஜி. என். ராசன், ஜோலார்பேட்டை.

கடலில் பெய்கின்ற மழை, காற்றிலே காய்கின்ற நிலவு இவைகளுக்கு நீங்கள் எதை ஒப்பிடுகிறீர்கள்?

பிறவிக்குருடன் கையில் கிடைத்த ஒளிவண்ண ஓவியம்! பத்தியம் இருப்போனெதிரில் பரிமாறப்பட்ட பல்சுவை விருந்து!

முத்துராசன், கீழப்புலியூர்.

நீங்கள் யாரிடமாவது எதையாவது எதிர்பார்த்து தோல்வி கண்டதுண்டா?

உண்டு, உண்டு. தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டியிடம் கண்ணியத்தை எதிர்பார்த்து ஏமாந்தது உண்டு.

பைத்தியக்காரத்தனமான ஞாபகமறதிக்கு ஒரு உதாரணம் சொல்லமுடியுமா?

அர்த்தராத்திரியில், இடியும் மின்னலும் கூடிய சினிமாப் படத்தைப் பார்த்துவிட்டு, அதே வேகத்தோடு வெளியிலே வந்து, கையிலே இருக்கிற குடையை விரித்துக்கொண்டு நடப்பது.

எஸ். பாமசிவன், குபேரபட்டிணம்

யார் யாரோ அரசியல் துறவிகளாக மாறிவிட்டார்கள், இன்னும் ஒருசிலர் மட்டும் தவளை போல் கத்திக்கொண்டிருக்கிறார்களே, ஏன்?

புரிகிறது, புரிகிறது. தமிழை அடிமைகொள்ள வேண்டும் என்று துடித்து நிற்கும் நீங்கள் கேட்கின்ற 'தமிழ் அரசு'கள் தமிழைக் கொன்றுவிட்டுத்தான் துறவிகளாக நினைக்கிறார்களாம்!

எஸ். ராமசாமி, சென்னை.

தமிழ் வீரனுக்கு இருக்கவேண்டிய அங்க அடையாளங்கள் இப்போது பொய்த்துவிட்டன என்று சொல்லப்படுகிறதே! அது உண்மைதானா?

இது தவறான முடிவு, தோழரே! சிவஞானக் கிராமணியாரை வைத்து மட்டும் நீங்கள் முடிவு கட்டிவிடக் கூடாது.

எஸ். பி. ராசன், வடாாப்.

அறிஞன், கலைஞன், கவிஞன் இப் பட்டங்கள் தொழில் பெயரா? மக்களால் தரப்பட வேண்டியவையா?

மூளை சம்பந்தப்பட்ட பட்டங்கள் எப்போதும் மக்களால் தரப்பட வேண்டியவையே தவிர, தொழிலை பற்றி குறிப்பிடுவன அல்ல.

எஸ். கந்தசாமி, மாகாளிபட்டி.

கடமைக்கும் உரிமைக்கும் வேற்றுமை என்ன?

தள்ளாத வயதில் தந்தைக்கு மகன் ஆற்றவேண்டிய உதவி கடமை! தள்ளாத வயதானாலும் தான் நினைத்த பெண்ணை திருமணம் செய்துகொள்ள அதே தந்தையிடம் வாதிடுவது உரிமை.

எப்படிப்பட்ட நாட்டில் சட்டங்கள் குறைவாக யிருக்கும்?

அரிஸ்டாட்டில் சொல்லிப்போன குறைந்த பரப்பளவுள்ள நாட்டில்.

சட்டம், அதிகாரம், நீதிமன்றம் இவைகளுக்குள்ள தொடர்பு என்ன?

பணம், செல்வாக்கு, சாதனை.

எஸ். எ. ஜி. சாமி, சுந்தரபாண்டியம்.

ஒரு கட்சிக்கு தொண்டர் முக்கியமா? தலைவர் முக்கியமா?

பயிர் இல்லாத தரிசு நிலத்திற்கு வேலி அவசியமில்லை. வேலியிடப்படாத பயிர்நிலமும் பயனைத் தராது.

எஸ். எ. ஜி. ஆனந்தன், திருவில்லிபுத்தூர்.

உலக சரித்திரத்தையே எழுதிய நேரு, நீங்கள் கூறும் திராவிட நாட்டை எதிர்ப்பதிலிருந்து உங்களுடைய கோரிக்கை தவறானது என்பது புலனாகிறதல்லவா?

நேரு எதிர்க்கவில்லை அன்பரே! மறுக்கிறார். சரித்திரம் சொல்லும் திராவிடநாட்டைப் பிரித்துக் கொடுத்துவிட்டால், சமாதானத் தூதன் என்று அகிலம் தனக்குத் தந்த பட்டம் பறிபோய் விடுமோ என்ற அசட்டு பயமாக இருக்கலாம்.

ச. மூக்கையா, விருதை.

ரஷ்யா சென்று வந்த பண்டித நேரு உடனடியாக இங்கே என்ன மாற்றம் செய்வார் என்று எதிர்பார்த்தீர்கள்?

சரித்திரப் புகழ்பெற்ற சாமல்கண்டுப் பகுதிப் பள்ளிகளில், சிறார்களுக்கு நீர்ப்பாசனத் திட்டங்களை நேரடியாகச் செய்து காண்பிக்கும் காட்சிகளை நேரிலே கண்டு வந்தவர் இங்கே வந்ததும் அவ்வாறு செய்து காண்பிக்க தன்னிடம் வசதியிருந்தாலும் இல்லாவிட்டாலும், மத போதனையையும் மகேஸ்வரன்தத்துவங்களையும் பள்ளிகளில் போதிக்கக் கூடாதென்றாவது சொல்வாரென்று எண்ணியிருந்தோம். எப்படி தனது சுற்றுப் பயணத்தில் அந்தந்த நாட்டுக் காலநிலைகளுக்கேற்றவாறு உடைகளை மாற்றிக்கொண்டாரோ, அப்படியே திரும்புகையிலும் படிப்படியாக தன் கருத்தை மாற்றிக் கொண்டு பழைய பண்டிதராகவே வந்து இறங்கியிருக்கிறார்.

விலை ரூ. 1-4-0.
கிடைக்குமிடம்:
நீலா நிலையம்,
2-127, மவுண்ட் ரோட்,
சென்னை - 6.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.